செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

'உவமைக் கவிஞர்' சுரதா





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-9-5

அண்ணா நூற்றாண்டு நூலகம்

ANNA CENTENARY LIBRARY

DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/113.%20%20'%E0%AE%89%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%88%E0%AE%95%E0%AF%8D%20%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D'%20%E0%AE%9A%E0%AF%81%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BE_1921

செந்தமிழ்சிற்பிகள்

'உவமைக் கவிஞர்' சுரதா (1921 - 2006)



அறிமுகம்

சுரதா (Suratha; நவம்பர் 23 1921 – சூன் 20 2006) இயற்பெயர் இராசகோபாலன் தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்னம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்னதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதா என்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துக் கூறுவர்.

வாழ்க்கைக் குறிப்பு

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தஞ்சை மாவட்டம் பழையனூர் (சிக்கல்) என்னும் ஊரில் பிறந்தவர். பெற்றோர் திருவேங்கடம்-செண்பகம் அம்மையார் ஆவர். பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றார். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார்.

பாரதிதாசனுடன் தொடர்பு

1941 சனவரி 14 இல் பாவேந்தர் பாரதிதாசனை முதன்முதல் கண்டு பழகிய சுரதா அவருடன் சிலகாலம் தங்கியிருந்து அவரது கவிதைப் பணிக்குத் துணை நின்றுள்ளார். பாவேந்தர் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளைக் கவனித்தல், பாவேந்தரின் நூல் வெளியீட்டிற்குத் துணை நிற்றல் எனப் பல நிலைகளில் பாவேந்தருடன் சுரதாவுக்குத் தொடர்பு இருந்துள்ளது.

கவிதை இயற்றல்

சுரதாவின் சொல்லடா என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பொன்னி என்னும் இதழ் 1947 ஏப்பிரல் திங்கள் இதழில் வெளியிட்டு இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது.

பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகம் தந்தை பெரியார், கலைவாணர் முன்னிலையில் நடைபெற்ற பொழுது அந்த நாடகத்தில் அமைச்சர் வேடத்தில் நடித்த பெருமைக்கு உரியவர் சுரதா. அரசவைக் கவிஞராக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை இருந்தபொழுது அவரின் உதவியாளராக இருந்தார்.

நாராயணன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த தலைவன் இதழின் துணை ஆசிரியராக பணியாற்றினார். அக்காலத்தில் பல சிறுகதைகளை எழுதினார். கவிஞர் திருலோகசீதாராமின் சிவாஜி இதழில் தொடக்கக் காலத்தில் சுரதாவின் கவிதைகள் வெளிவந்துள்ளன. திருச்சிராப்பள்ளி வானொலியில் சுரதாவின் பல கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.

திரைப்படத் துறையில்

சுரதாவின் கலையுணர்வினைக் கண்ட கு.ச.கிருட்டிணமூர்த்தி என்பவர் இவரைத் திரையுலகத்திற்கு அறிமுகப்படுத்தினார்.
1944 ஆம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் திரைப்படத்திற்கு முதன்முதல் உரையாடல் எழுதினார். மிகக் குறைந்த அளவுக்கான பாடல்களையே அவர் எழுதியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அவரது இரண்டு பாடல்கள்,

'அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு', மற்றும் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' ஆகியவை. 100 இற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார்.

எழுத்துப்பணி

சுரதாவின் முதல் நூல் சாவின் முத்தம். இதனை வி.ஆர்.எம்.செட்டியார் என்பவர் 1946 மார்ச்சு மாதம் வெளியிட்டார்.
1956 இல் பட்டத்தரசி என்ற சிறு காவிய நூலை வெளியிட்டார்.
1954 இல் கலைஞர் கருணாநிதியின் முரசொலி இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார்.

1955 இல் காவியம் என்ற வார இதழைத் தொடங்கினார். இவ்விதழைத் தொடர்ந்து இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), விண்மீன் (1964), சுரதா (1988) எனக் கவிதை வளர்ச்சிக்குப் பல இதழ்களை வெளியிட்டார்.

1971 ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் இதழில் சுரதா திரைப்பட நடிகைகளின் அகவாழ்க்கையைப் பற்றி எழுதிய கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. பின்னாளில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டு சுவரும் சுண்ணாம்பும் என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது (1974).

பாரதிதாசனின் தலைமாணாக்கராகக் கருதத்தகும் கவிஞர் சுரதா, பல நூல்களாக இருந்த பாவேந்தர் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுத் திருவாசகன், கல்லாடன் பெயரில் அந்த நூல் வெளிவரக் காரணமானார். உலகின் அரிய செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டும் சுரதா இல்லத்தில் அரிய நூல்கள் கொண்ட நூலகத்தை உருவாக்கினார்.

தமிழ், கவிதை, புகழ் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட புரவலர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை இணைத்துச் சில வினோதக் கவியரங்கங்களை நடத்துபவராக இருந்தார் சுரதா. படகுக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம், விமானக் கவியரங்கம் முதலியவை அவை. கவியரங்குகளைக் கொண்டாட்ட நிகழ்வாக மாற்றியதில் அவருக்கு மிகுந்த பங்குண்டு.

பாவேந்தர் தலைமையில் இயங்கிய தமிழ்க்கவிஞர் பெருமன்றத்திற்கு 1966 இல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

பெற்ற சிறப்புகள்

1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

1972 இல் தமிழக அரசு சுரதாவுக்குக் கலைமாமணி என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

1978 இல் ம.கோ.இரா. தலைமையில் அமைந்த அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தது.

தமிழக அரசு சுரதாவின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் குடும்பத்திற்குப் பத்து இலட்சம் உரூவா பரிவுத்தொகை வழங்கியுள்ளது(2007).

1982 இல் சுரதாவின் மணிவிழாவையொட்டி நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த விழாவில் ரூபா அறுபதாயிரம் பரிசாகத் தரப்பெற்றது.

1982 இல் சுரதாவின் கவிதைப் பணிகளைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த விழாவில் கவியரசர் பட்டம் வழங்கப்பட்டது.

1987 இல் மலேசியாவில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டிற்குச் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பெற்றார்.

1990 இல் கலைஞர் அரசு பாரதிதாசன் விருதினைச் சுரதாவுக்கு வழங்கியது.

1990 இல் கேரளாவில் மகாகவி குமரன் ஆசான் விருது சுரதாவுக்குக் கிடைத்தது.

சுரதாவின் தேன்மழை நூலுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ரூபா ஒரு இலட்சம் இராசராசன் விருது வழங்கப்பட்டுள்ளது.

29.09.2008 இல் சென்னையில் சுரதாவுக்கு நினைவுச்சிலை நிறுவப்பட்டு கலைஞர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இச்சிலை அமைக்கப்பட்டது.

சுரதாவின் கவிதைகள் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடநூல்களில் இடம்பெற்றுள்ளன. சுரதாவின் கவிதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மறைவு

இவர் தன்னுடைய 84ம் வயதில் 2006 சூன் 20 செவ்வாய்க்கிழமை சென்னையில் உடல் நலக்குறைவால் காலமானார்.

குடும்ப உறுப்பினர்கள்

சுரதாவுக்குச் சுலோசனா என்ற மனைவியும், கல்லாடன் என்ற மகனும் உள்ளனர். இவரின் மருமகள் பெயர் இராசேசுவரி கல்லாடன். பெயரர்கள் இளங்கோவன், இளஞ்செழியன் என இருவர்.

சுரதாவின் படைப்புகள்

தேன்மழை (கவிதைத் தொகுப்பு, 1986)
துறைமுகம் (பாடல் தொகுப்பு, 1976)
சிரிப்பின் நிழல் (பாடல் தொகுப்பு)
சிக்கனம்
சுவரும் சுண்ணாம்பும் (பாடல் தொகுப்பு, 1974)
அமுதும் தேனும், 1983
பாரதிதாசன் பரம்பரை (தொ.ஆ), 1991
வினாக்களும் சுரதாவின் விடைகளும்
நெய்தல் நீர்
உதட்டில் உதடு
எச்சில் இரவு
எப்போதும் இருப்பவர்கள்
கலைஞரைப் பற்றி உவமைக் கவிஞர்
சாவின் முத்தம்
சிறந்த சொற்பொழிவுகள்
சுரதா கவிதைகள் (கையடக்கப் பதிப்பு)
சுவரும் சுண்ணாம்பும்
சொன்னார்கள்
தமிழ்ச் சொல்லாக்கம்
தொடாத வாலிபம்
நெஞ்சில் நிறுத்துங்கள்
பட்டத்தரசி,(பாவியம்)1957;
முத்துநூலகம். 8 ஜி, பைகிராப்ட்ஸ் சாலை. சென்னை-5

பாவேந்தரின் காளமேகம்
புகழ்மாலை
மங்கையர்க்கரசி
முன்னும் பின்னும்
வார்த்தை வாசல்
வெட்ட வெளிச்சம்

(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)

தமிழ் இணையக் கல்விக்கழகம்
தமிழ் வளர்ச்சித் துறை

கவிஞர் சுரதா

பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதன் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றி பின்னர் சுரதா என்று மாற்றிக்கொண்டார்.

https://tamildigitallibrary.in/nationalisedbooks/author-detail/179

ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பெயர்	கவிஞர் சுரதா
இயற்பெயர்	இராசகோபாலன்
புனைபெயர்கள்	உவமைக் கவிஞர்
பிறந்த ஆண்டு	1921, நவம்பர் 23
பெற்றோர்	திருவேங்கடம் - செண்பகம் அம்மையார்
வாழ்க்கைத் துணை	சுலோசனா
குழந்தைகள்	கல்லாடன்
பணி	எழுத்தாளர், திரைப்படப் பாடலாசிரியர்
பதவிகள்	தமிழ்க்கவிஞர் பெருமன்றத் தலைவர்
குறிப்பிடத்தக்க படைப்புகள்	தேன்மழை, அமுதும் தேனும், சுரதா கவி பரம்பரை
பிறந்த ஊர்	பழையனூர்
வட்டம்	சங்கமங்கலம்
மாவட்டம்	தஞ்சாவூர்
மாநிலம்	தமிழ்நாடு
நாடு	இந்தியா
விருதுகள் / பட்டங்கள்	தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது, குமரன் ஆசான் விருது, இராசராச
நாட்டுடைமை ஆண்டு	2007
இறப்பு	2006, ஜூன் 20
இறந்த ஊர்	சென்னை

உவமைக்கவிஞர் சுரதா

அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

https://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-36.htm

01.	Suradha's Poetry (English)
02.	அமுதும் தேனும்
03.	உதட்டில் உதடு
04.	எச்சில் இரவு
05.	எப்போதும் இருப்பவர்கள்
06.	கலைஞரைப் பற்றி உவமைக் கவிஞர்
07.	சாவின் முத்தம்
08.	சிறந்த சொற்பொழிவுகள்
09.	சுரதா கவிதைகள் (கையடக்கப் பதிப்பு)
10.	சுவரும் சுண்ணாம்பும்
11.	சொன்னார்கள்
12.	தமிழ்ச் சொல்லாக்கம்
13.	துறைமுகம்
14.	தேன்மழை
15.	தொடாத வாலிபம்
16.	நெஞ்சில் நிறுத்துங்கள்
17.	பட்டத்தரசி
18.	பாரதிதாசன் பரம்பரை
19.	பாவேந்தரின் காளமேகம்
20.	புகழ்மாலை
21.	மங்கையர்க்கரசி
22.	முன்னும் பின்னும்

சுரதா சுப்புரத்தினதாசன்



பிறப்பு	ராசகோபாலன் 23 நவம்பர் 1921 பழையனூர், சங்கமங்கலம் ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் (இன்றைய நாகப்பட்டினம் மாவட்டத்தில்), தமிழ்நாடு
இறப்பு	20 சூன் 2006 (அகவை 84)
பணி	கவிஞர்

இலக்கியவாழ்க்கை

பாரதிதாசனின் உதவியாளராக இருந்த சுரதா பாரதிதாசன் மீது கொண்ட பற்றால் சுப்புரத்தினதாசன் என பெயரை மாற்றிக்கொண்டார். அதைச் சுருக்கி சுரதா என ஆக்கினார். பாரதிதாசனை பதின்வயதில் சென்று சந்தித்தபோது அவர் ஏதேனும் கவிதை பாடக்கேட்டதாகவும் உடனே சுரதா 'நடுவிரல்போல் தலைதூக்கு - நம் நாட்டாரின் இன்னலைப் போக்கு' என்று தொடங்கும் கவிதையைப் பாடி அவர் பாராட்டைப் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது. பாரதிதாசனின் எழுத்துக்களை செம்பிரதி எடுப்பது, அவர் நடத்திய இதழ்களில் உதவிசெய்வது ஆகியவற்றைச் செய்துவந்த சுரதா அவ்விதழ்களில் குறிப்புகளையும் எழுதினார்.

சுரதா நாமக்கல் கவிஞரின் உதவியாளராகவும் சிலகாலம் பணியாற்றினார்.

சிறுகதை

சுரதா எழுதிய முதல் கதை பிரசண்ட விகடன் இதழில் வெளிவந்த கவி அமரன். அந்தக் கதையை வெளியிட்ட நாரண துரைக்கண்ணன் சுரதாவை ஊக்குவித்து நிறைய எழுதத் தூண்டினாலும் சுரதா கதைகளை அதிகமாக எழுதவில்லை, கவிதையிலேயே நாட்டம் கொண்டிருந்தார்.

கவிதை

சுரதா பாரதிதாசன் பரம்பரை கவிஞராக அறியப்படுகிறார். திருலோக சீதாராம் நடத்திவந்த சிவாஜி இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதினார். பின்னர் மாலைமணி இதழிலும் எழுதினார்.1954 - 1955 ஆண்டுகளில் மு.கருணாநிதி நடத்திவந்த முரசொலி இதழில் தொடர்ச்சியாக சுரதா எழுதிய கவிதைகள் புகழ்பெற்றவை. 1971-ல் ஆனந்த விகடன் இதழிலும் தொடர்ச்சியாக சினிமாச்செய்திகளை கவிதைகள் எழுதினார்.

சுரதாவின் முதல் கவிதைத் தொகுதி 1946-ல் திருச்சி ஸ்டார் பிரசுரம் வெளியிட்ட சாவின் முத்தம். 1965-ல் சேகர் பதிப்பகம் சென்னை வெளியிட்ட தேன்மழை சுரதாவின் புகழ்பெற்ற கவிதைத் தொகுதி

சுரதாவின் கவிதைகள் உவமைகள் செறிந்தவை. உதட்டில் உதடு என்னும் நூலுக்காக ஜெகசிற்பியன் தலைமையில் மாயவரம் நகரில் 1953-ல் நடத்திய பாராட்டுக்கூட்டத்தில் அவருக்கு உவமைக் கவிஞர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அதன்பின் அவர் அப்பெயருடனேயே அழைக்கப்பட்டார். ஆயிரக்கணக்கான கவியரங்குகளில் சுரதா கவிதைவாசிப்பு நிகழ்த்தியிருக்கிறார்.

சுரதா வன்னிய வீரன் என்னும் குறுங்காவியத்தையும், மங்கையும் மாவீரனும், விதவையும் வேதாந்தியும், வெந்நீரில் வெந்தவன், அமுதும் தேனும் முதலான நீண்ட கவிதைகளையும் எழுதியுள்ளார்.

விருதுகள்

- 1972 கலைமாமணி விருது
- 1982 குன்றக்குடி அடிகளார் அளித்த கவியரசு பட்டம்
- 1982-ல் தமிழக அரசு 60000 ரூ பணமுடிப்பு வழங்கியது
- 1990 பாரதிதாசன் விருது

- 1990 குமாரன் ஆசான் விருது
- 1992 உலகத் திருக்குறள் உயராய்வு மன்றம் குறள் பரப்பு மாமணி விருது
- 1995 தமிழக அரசின் மாமன்னன் ராஜராஜன் விருது
- 1999 முரசொலி அறக்கட்டளையின் கலைஞர் விருது
- ஆதித்தனார் விருது
- கவிக்கோ அப்துல் ரகுமான் விருது
- தந்தை பெரியார் விருது
- சமத்துவ மாமணி விருது
- கவியரசு கண்ணதாசன் விருது

பெற்ற சிறப்புகள்

- 1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.
- 1972 இல் தமிழக அரசு சுரதாவுக்குக் கலைமாமணி என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.
- 1978 இல் ம.கோ.இரா. தலைமையில் அமைந்த அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தது.
- தமிழக அரசு சுரதாவின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் குடும்பத்திற்குப் பத்து இலட்சம் உரூவா பரிவுத்தொகை வழங்கியுள்ளது(2007).
- 1982 இல் சுரதாவின் மணிவிழாவையொட்டி நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த விழாவில் ரூபா அறுபதாயிரம் பரிசாகத் தரப்பெற்றது.
- 1982 இல் சுரதாவின் கவிதைப் பணிகளைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த விழாவில் கவியரசர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1987 இல் மலேசியாவில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டிற்குச் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பெற்றார்.
- 1990 இல் கலைஞர் அரசு பாரதிதாசன் விருதினைச் சுரதாவுக்கு வழங்கியது.
- 1990 இல் கேரளாவில் மகாகவி குமரன் ஆசான் விருது சுரதாவுக்குக் கிடைத்தது.
- சுரதாவின் தேன்மழை நூலுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ரூபா ஒரு இலட்சம் இராசராசன் விருது வழங்கப்பட்டுள்ளது.

- 29.09.2008 இல் சென்னையில் சுரதாவுக்கு நினைவுச் சிலை நிறுவப்பட்டு கலைஞர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இச்சிலை அமைக்கப்பட்டது.

நூல்கள்

கவிதைகள்

- சாவின் முத்தம் 1946
- உதட்டில் உதடு 1953
- தொடாத வாலிபம் 1954
- எப்போதும் இருப்பவர்கள் 1954
- பட்டத்தரசி 1965
- தேன்மழை 1965
- கவிதைத்தலைவர் நேரு 1966
- நெஞ்சில் நிறுத்துங்கள் 1976
- துறைமுகம் 1976
- சுவரும் சுண்ணாம்பும் 1976
- எச்சில் இரவு 1980
- அமுதும் தேனும் 1983
- சுரதா கவிதைகள் 1993
- முத்துப்பந்தல் 2010
- பூக்கூடை 2010
- வாழ்த்துமழை 2010
- விதைகள் 2010
- விரல்நுனி வைரங்கள் 2010
- இதழ்மலர்கள் 2010

கட்டுரைகள்

- சொன்னார்கள் 1978
- வார்த்தை வாசல் 1984
- பாவேந்தரின் காளமேகம் 1987
- கலைஞர் பற்றி உவமைக் கவிஞர் - 1988

- வினாக்களும் சுரதாவின் விடைகளும் 1991
- பாரதிதாசன் பரம்பரை 1993
- சிறந்த சொற்பொழிவுகள் 2004
- முன்னும் பின்னும் 2004
- தோரணவாயில் 2010
- தமிழ்ச்சொல்லாக்கம் 2010
- அரங்கத்தில் அறிமுகம் 2020
- புகழ்மாலை 2010
- அரசியல் அரங்கம் 2010
- திரை ஓசை 2010
- செய்தியும் சிந்தனையும் 2010
- முன்னுரை ஊர்வலம் 2010
- நெய்த செய்திகள் 2010
- உண்மையைச் சொல்கிறேன் 2010

திரைப்பட வசனம்

- மங்கையற்கரசி 1950

இதழியல்

சுரதா புதுக்கோட்டையில் இருந்து நாராயணன் என்பவரால் நடத்தப்பட்ட தாய்நாடு இதழில் சிறிதுகாலம் துணையாசிரியராகப் பணியாற்றினார். திருநோ

சுரதா நடத்திய இதழ்கள் பல

- காவியம் 1953
- இலக்கியம் 1958
- ஊர்வலம் 1963
- சுரதா 1968
- விண்மீன் 1964
- சுண்டல் 1974

சுரதா நடத்திய எந்த இதழும் நீண்டகாலம் வெளிவரவில்லை.

கடல்

விண்வெளி இவ்வை யத்தின்
விரிகுடை; புவியில் வாழும்
பெண்களின் கண்கள் இட்ட
பிச்சையே கடலின் நீலம்!

- நூல் : தேன்மழை

கள்ளுண்ட சிற்றினத்தார் நடையைப் போலே
கருங்கடலின் மீதலைகள்; சங்கத் தாரால்
தள்ளுண்ட பாடலைப்போல் நுரைகள்; வண்ண
சமுத்திரத்தின் ஓரத்தில் சிறுவெண் காக்கை.

-போபால் தமிழ்ச்சங்கம் சிறப்பு மலர்
(1966-67)

அலைவளர் கடலே ஆழம்
அலைகளே அதன்கைத் தாளம்.

- நூல் : தேன்மழை

ஆறுகள் அனைத்தையும் அலைகடல் கூப்பிடும்
உப்பை மட்டுமே ஓயாமல் சாப்பிடும்.

***

நெடுங்கடல் என்பது நெய்தல் நிலத்தின்
ஓரத்தைக் குறிக்கும் உப்புநீர் விளம்பரம்.
-இதழ்: 'சுரதா' (1-12-1970)

தள்ளிக்கொள் என்பதெல்லாம் மனிதன் சட்டம்!
தழுவிக்கொள் என்பதுதான் கடலின் சட்டம்

***

வரையாத ஓவியமே! தடாகந் தன்னில்
வளராத தாமரையே! நிலமும் நீரும்
பிரியாத புணர்ச்சியுடன் இருப்ப தாலே
பெருங்கடலைப் புணரியென்றார்............

***

இரவல் நிறத்தை எங்கோ வாங்கி
இருண்ட கடலெனப் பெயர்பெற் றிருக்கும்
போலிக் கடலோ வேலியில் லாதது!
நிலத்தை விழுங்க நினைக்கும் நீர்நிலை!

***

அந்தக் காலத்து அரசன், பற்பல
மாதரைத் தழுவி மகிழ்ந்தாற் போல
வளைந்தும் நெளிந்தும் வருகின்ற பற்பல
நதிகளைப் புணரும் தண்ணீர் நாயகன்.

***

கரையொடு பிறவாக் கருங்கடல், பூத்த
நரையொடு பிறந்த நதிபதி யாகும்!

***

நீல வானத்தின் நிலைக்கண் ணாடிதான்
கத்திக் கொண்டிருக்கும் கருங்கட லாகும்.

***

பள்ளத்தில் துள்ளு கின்ற
    பனிக்கடல் பாராய்? தீயோர்
உள்ளத்தின் இருட்டும் இந்த
    ஒலிகடல் இருட்டும் ஒன்றே!

-இதழ் : இலக்கியம்
(15-3-1961)

ஆடிக்கொண் டேயி ருக்கும்
    அழகனா தொட்டில்! கத்திப்
பாடிக்கொண் டேயி ருக்கும்
    பாடகன்! பூமிப் பெண்ணைக்
கூடிக்கொண் டேயி ருக்கும்
    கொக்கோகக் கிழவன் உப்பின்
வீடிது! மகர மீன்கள்
    விளையாடும் தண்ணீர் வீதி!


-இதழ் : இலக்கியம்
(15-3-1961)

திரைப்படம்

சுரதா தன் 23-ம் வயதில் சினிமாத்துறையில் நுழைந்தார். 1949-ல் பி.யூ. சின்னப்பா நடித்த மங்கையர்க்கரசி என்னும் படத்துக்கு உரையாடல் எழுதினார். அமரகவி (1952) ஜெனோவா (1953) ஆகிய படங்களுக்கு உரையாடல் எழுதினார்.

சுரதா முதன்முதலாக 'என் தங்கை' என்னும் படத்துக்காக 'ஆடும் ஊஞ்சலைப்போல் அலை ஆடுதே' என்னும் பாடலை எழுதினார். அவருக்கு பெரும்புகழை பெற்றுத்தந்த பாடல் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் படத்துக்காக அவர் எழுதிய 'அமுதும் தேனும் எதற்கு'.

சுரதா ஏறத்தாழ முப்பது படங்களுக்குப் பாடல்கள் எழுதியிருக்கிறார். அவர் கடைசியாக எழுதிய பாடல் 1974-ல் வெளிவந்த 'நேற்று இன்று நாளை' படத்துக்காக 'நெருங்கி நெருங்கிப் பழகும்போது'.







சுரதா சிலை சென்னை அசோக்நகர்

Suradha (Uvamai Kavingar Suradha) was a legendary Tamil poet and lyricist who contributed to over 100 films, writing memorable songs and dialogues. He is particularly known for his work in the 1950s and 60s, including popular songs in films like *Neer Kumizhi* and *En Thangai*.

Key movies and contributions by Suradha include:

- **Amarakavi (1952)**: Wrote lyrics.
- **Mangayarkarasi (1949)**: Penned dialogues and songs.
- **En Thangai (1952)**: Lyricist for "Aadum Oonjalai Pole".
- **Neer Kumizhi (1965)**: Lyricist for the song "Aadi Adangum Vaazhkaiyada".
- **Genova (1953)**: Contributed to the musical score.
- **Other Notable Songs/Dialogues:** *Abalai Anjugam* (1959), *Boologa Rambai* (1958), *Nadodi Mannan* (1958), *Thai Pirandhal Vazhi Pirakkum* (1958).

5

He was the first to write dialogues for a Tamil film (*Mangayarkarasi*) that were published as a book.

உவமைக்கவிஞர் சுரதா (நவம்பர் 23, 1921 - ஜூன் 20, 2006) பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்த முக்கிய மரபுக்கவிஞர் மற்றும் திரைப்படப் பாடலாசிரியர் ஆவார். இராசகோபாலன் என்ற இயற்பெயர் கொண்ட இவர், பாரதிதாசன் மீது கொண்ட பற்றால் சுப்புரத்தினதாசன் (சுரதா) எனப் பெயர் மாற்றிக்கொண்டார். தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும் இவரது முக்கிய படைப்புகள்.

சுரதாவின் காலவரிசை (Chronology):

- **1921 நவம்பர் 23:** திருவாரூர் மாவட்டம் பழையனூரில் பிறந்தார்.
- **ஆரம்ப காலம்:** பாரதிதாசனிடம் பாடம் பயின்று, அவரது "சுப்புரத்தினம்" என்ற பெயரால் 'சுப்புரத்தினதாசன்' என மாற்றிக்கொண்டார்.
- **1940-கள்:** திரைப்படத்துறையில் கவிஞராகவும், வசனகர்த்தாவாகவும் நுழைந்தார்.
- **1952:** 'அமரக்கவி', 'என் தங்கை' போன்ற படங்களில் பாடல்கள் எழுதினார்.
- **1955:** 'காவியம்' வார இதழைத் தொடங்கினார்.
- **1958:** 'இலக்கியம்' இதழைத் தொடங்கினார்.

- **1963:** 'ஊர்வலம்' இதழைத் தொடங்கினார்.
- **1964:** 'விண்மீன்' இதழைத் தொடங்கினார்.
- **1970-கள்:** 'தேன்மழை' உள்ளிட்ட பல கவிதை நூல்களை வெளியிட்டார்.
- **1988:** 'சுரதா' இதழைத் தொடங்கினார்.
- **1990-கள்:** கவிதை, இதழியல் பணிகளில் தொடர்ந்து சிறந்து விளங்கினார்.
- **2006 ஜூன் 20:** காலமானார்.

சிறப்பம்சங்கள்:

- உவமைகளை கையாள்வதில் சிறந்து விளங்கியதால் **"உவமைக்கவிஞர்"** என்று அழைக்கப்பட்டார்.
- தமிழ் திரைப்படப் பாடல்களில் புதுமையான கவிதை நடையைக் கொண்டுவந்தார்.

கவிதை இயற்றல்

சுரதாவின் *சொல்லடா* என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பொன்னி என்னும் இதழ் 1947 ஏப்ரல் திங்கள் இதழில் வெளியிட்டு இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது.

பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகம் தந்தை பெரியார், கலைவாணர் முன்னிலையில் நடைபெற்ற பொழுது அந்த நாடகத்தில் அமைச்சர் வேடத்தில் நடித்த பெருமைக்கு உரியவர் சுரதா. அரசவைக் கவிஞராக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை இருந்தபொழுது அவரின் உதவியாளராக இருந்தார்.

நாராயணன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த *தலைவன்* இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலத்தில் பல சிறுகதைகளை எழுதினார். கவிஞர் திருலோகசீதாராமின் *சிவாஜி* இதழில் தொடக்க காலத்தில் சுரதாவின் கவிதைகள் வெளி வந்துள்ளன. திருச்சிராப்பள்ளி வானொலியில் சுரதாவின் பல கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.

"*இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை*" என்ற இவரது வரிகள் மிகவும் புகழ்பெற்றது.

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/blogs/740143-poet-suratha-the-one-who-changed-the-name-because-there-is-no-place-to-write.html

உவமைக் கவிஞர் சுரதா:
எழுத இடம் இல்லை என்று பெயரை மாற்றியவர்

சுரதாவின் 101-வது பிறந்த நாள் இன்று...

ஓர் அஞ்சலட்டையின் இறுதியில் சுப்புரத்தினதாசன் என்று தம் பெயரை எழுதுவதற்கு இடம் போதவில்லை என்று அதனைச் சுருக்கி சு.ர.தா. என்று எழுதியவர், காலப்போக்கில் அவ்வாறே தம் பெயரை எழுதத் தொடங்கினார். பெயரெழுத்துகளுக்கு நடுவில் ''எதற்கு இந்தத் தேவையில்லாத ஆணிகள்?'' என்று கருதியவர் அவற்றைப் பிடுங்கிவிட்டார். ஆணி பிடுங்கப்பட்ட அப்பெயரே 'சுரதா' என்று நிலைத்தது.

''ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உடையப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ'' என்பவை பாரதிதாசனின் புகழ்பெற்ற வரிகளைக் கேட்ட இராசகோபாலன் அவர் மீது கொண்ட பற்றின் காரணமாக 'சுப்புரத்தினதாசன்' ஆனார்.

நாகப்பட்டினத்தை அடுத்த பழையனூரில் 1921ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாளில் சுரதா பிறந்தார்.

பாரதிதாசனிடம் பணி

பாரதிதாசனின் இருப்பிடம், தமிழ், கவிதை, இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுடைய இளைஞர்களின் வேடந்தாங்கலாக விளங்கியது. புதிது புதிதாக இளைஞர்கள் வருவதும் தங்குவதும் போவதுமாக இருப்பார்கள். சுப்புரத்தினதாசனாகிய இராசகோபாலனும் பாரதிதாசனிடம்

உதவியாளராகச் சேர்ந்துகொண்டார். இருபது ரூபாய் திங்களூதியம் பெற்றுக்கொண்டு பாவேந்தரிடம் இரண்டாண்டுகள் பணியாற்றினார்.

பெரும்பாலும் கவிஞர்கள் பிறரைப் பின்பற்றி எழுதும் வழக்கமுடையவர்கள். அதை சுரதா விரும்பாதவர். "தனக்கு அதில் உடன்பாடில்லை, "அந்த நிழல் வழி வாசலை' விட்டு நீங்கி எழுதும் கவிஞன் நான். இவரையோ, அவரையோ பின்பற்றி எழுதப் பிரியப்படாதவன்'' என்று மார்தட்டிக் கொள்வதில் தவறில்லை என்பதை நிரூபித்தவர்.

அரசியலில் பெரியாரையும், கவிதையில் பாரதிதாசனையுமே சுரதா வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டார். ஆனாலும், தனது எழுத்தியக்கத்தில் உள்ளடக்கம், வடிவம் என எதிலும் அந்தத் தாக்கம் வந்துவிடாதவாறு கவனமாகவும் இருந்தார்.

சுரதாவின் முதலாவது கவிதைத் தொகுப்பிற்கு 'சாவின் முத்தம்' என்று பெயரிட்டார். முதல் தொகுப்பிற்கே இப்படிப் பெயர் வைக்கலாமா என்று நண்பர்கள் வினவியுள்ளனர். இளமையிலேயே பகுத்தறிவுக் கொள்கைப் பற்றாளர் என்பதால் அது குறித்து அஞ்சியதேயில்லை. ''கவிதை என்பது வரப்பிரசாதமில்லை. கற்றுக்கொண்டு உழைத்தால் வருவது'' என்பதில் உறுதியான கருத்துடையவர். தம்மை 'மொழிப்பற்றாளர்' என்று கூறுவதையும் அவர் ஏற்கவில்லை.

''இது மொழிப்பொறுப்பு. பற்று வைத்தல் இன்னொன்றைச் சிறப்பாகக் கண்டவுடன் மாறிவிடக்கூடியது'' என்றார்.

சொந்தப் பதிப்பகம்

தனது பெயரிலேயே பதிப்பகம் ஒன்றையும் தொடங்கி நடத்தினார் சுரதா. 'அமுதும் தேனும்', 'தேன்மழை' உள்ளிட்ட அவரது கவிதைத் தொகுப்புகள் மட்டுமின்றி, முக்கியமான சொற்பொழிவுகளையும் மேற்கோள்களையும் தொகுத்து வெளியிட்டார்.

'வெட்டவெளிச்சம்' என்ற தலைப்பில் அவர் தொகுத்து வெளியிட்ட தகவல்கள், முகிலின் 'அகம் புறம் அந்தப்புரம்' புத்தகத்துக்கெல்லாம் முன்னோடி முயற்சி. தமிழ்ச் சொல்லாக்கம் குறித்த அவரது குறிப்புகளின் தொகுப்பு அகராதியியலாளர்களுக்கும் மொழியியலாளர்களுக்கும் நல்லதொரு ஆவணம். அவர் தொகுத்து வெளியிட்ட குறிப்புகளின் வழியே,

அவருடைய பல்துறை ஆர்வத்தையும் பரந்துபட்ட வாசிப்பையும் புரிந்துகொள்ள முடியும்.

எதனைப் பற்றியும் அஞ்சாமல் தடாலடிக் கருத்துகளைக் கூறுபவர் சுரதா. அவற்றில் உண்மையும் இருந்ததால் மறுப்பதும் கடினம். "புதுக்கவிதைக்கு வடிவம் இல்லையே, வடிவம் இல்லாதது எப்படி நிலைக்கும்?" என்றார். "மரபு வடிவம் இல்லாமல் இருப்பதால் இப்போதைக்குப் புதிதாகத் தெரிகிறது" என்பது அவரது கணிப்பு. அது உண்மையும்கூட. தற்போது தம் புதுமையை எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்ற இக்கட்டில் புதுக்கவிதையுலகம் இருக்கிறது.

இதழ்களின் ஆசிரியர்

தம் வாழ்நாள் முழுவதும் இலக்கியம், தமிழ், கவிதை சார்ந்து ஓயாது ஊக்கமுடன் இயங்கிக்கொண்டிருந்தவர் சுரதா. எழுதுபவர்களைவிடவும் பதிப்பிப்பவர்களும், இதழ் நடத்துபவர்களும் தமிழுக்குச் சிறந்த தொண்டு செய்கிறார்கள் என்று கருதினார்.

"காவியம், இலக்கியம், ஊர்வலம், விண்மீன், சுரதா" ஆகிய பெயர்களில் இதழ்களை வெளிக்கொணர்ந்தார். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். சுரதாவின் கவிதைகளில் மூன்றாம்பால் கூறுகள் தூக்கலாக இருக்கும்.

"எனக்குப் பொடிபோடும் பழக்கத்தைத் தவிர வேறெந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. அதனால் நான் நோயினால் சாகமாட்டேன்." என்று உறுதியாக நம்பினார். அவர் நம்பியதற்கொப்பவே நீண்ட வாழ்க்கையை வாழ்ந்தார்.

தமிழக அரசு கவிதைக்கென்று வழங்கத் தொடங்கிய பாரதிதாசன் விருதினை முதலாமவராகப் பெற்றவர் சுரதா. எண்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து சூன் 20ஆம் நாள் 2006ஆம் ஆண்டு மறைவுற்றார்.

**"பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்"**

- சுரதா

கட்டுரையாளர்: வேல்.ஷாருக்

டிஜிட்டல் மாணவப் பத்திரிகையாளர்.



https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZt9july.TVA_BOK_0002001

சுரதாவின் [தேன்மழை](#) என்பது உவமைக் கவிஞர் சுரதா எழுதிய மிகச்சிறந்த மரபுக்கவிதைத் தொகுப்பு. 1965-ல் வெளியான இந்நூல், இயற்கை, காதல், சமூகம் மற்றும் கவிதை நயங்களை உவமைகள் வழியே கையாண்டுள்ளது. 1969-ல் தமிழக அரசின் விருதைப் பெற்ற இப்புத்தகம், தமிழ்க் கவிதையுலகில் உவமைகளின் களஞ்சியமாகக் கருதப்படுகிறது.

தேன்மழை நூல் பற்றிய முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** உவமைக் கவிஞர் சுரதா.
- **வகை:** மரபுக்கவிதைகள்.
- **முதற்பதிப்பு:** ஜனவரி 1965 (சேகர் பதிப்பகம்).
- **விருது:** 1969-ல் தமிழக அரசின் பரிசு பெற்றது.
- **சிறப்பு:** இது 100-க்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்டுள்ளது.

  Wikipedia +2

நூலின் உள்ளடக்கம்:

தேன்மழை இயற்கையின் எழில், காதல் (அகத்துறை), சமூக நிகழ்வுகள், மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் போன்றோரைப் பற்றிய கவிதைகளை உள்ளடக்கியது. கவிஞர் சுரதா தனது கவிதைகளில் ஆழமான, அதேசமயம் எளிமையான உவமைகளை கையாண்டுள்ளார், [தினமலர் செய்தி](#).

முக்கியப் பகுதிகள்:

- இயற்கை எழில்
- அகத்துறை (காதல்)
- காரணப்பெயர்கள்
- மங்கையர் பூங்கா
- இசைவிருந்து.

தமிழின் மரபுக் கவிதை வளத்தை மேம்படுத்திய மிக முக்கிய நூல்களில் ஒன்றாக தேன்மழை திகழ்கிறது

https://www.keetru.com/index.php/2009-11-06-11-47-46/karunchattai-nov1-2016/31758-2016-11-07-02-36-44

உவமைக் கவிஞர் சுரதா

எழில்.இளங்கோவன்

காதல் எப்படிப்பட்டது?

வள்ளுவரைப் பின்பற்றிச் சொல்கிறார் சுரதா,

"மலரினும் மெல்லியது காதலே".

காதல் தலைவி தன் தலைவனைப் பார்க்கிறாள். மகிழ்ச்சி மேலிடுகிறது. அதை அவனிடமே சொல்கிறாள் - இப்படி, "சுடர் மின்னல் கண்டு தாழை மலர்வதுபோலே உனைக்கண்டு உள்ளம் மகிழ்ந்தேனே".

கவிஞர் சுரதாவின் இந்தப் பாடல் வரிகளின் வயது 58. ஆனால் இன்னமும் இளமையாகவே இருக்கிறது.

காலையில் சூரியனை பார்த்து தாமரை மலரும். அந்தியில் கருக்கலைப் பார்த்து மல்லிகை மலரும். இரவில் நிலவைப் பார்த்து அல்லி மலரும் - அறிவோம் நாம். நாளும் இவை நடைபெறத்தான் செய்கின்றன.

ஆனால் எப்போதோ மேகம் கருத்து, மழை பெய்யும் காலத்தில் மின்னல் வெட்டுகிறது. அதுவும் ஓரிரு மணித்துளிகளில் மறைந்து விடுகிறது.

அந்த ஓரிரு மணித்துளிகளில் பட்டுத் தெறிக்கும் மின்னலின் சுடரைக்கண்டு தாழை மலர்கிறது, என்ற அறிவியல் உவமையைக் காதலுக்குள் நுழைக்கிறார் கவிஞர் சுரதா.

அதனால்தான் அவர் 'உவமைக் கவிஞர்' என்று அழைக்கப்பட்டார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் முதன்மை மாணாக்கருள் சுரதாவும் ஒருவர்.

1941ஆம் ஆண்டு சனவரி திங்கள் 14ஆம் நாள் பாவேந்தரை முதல்முதலாகச் சந்தித்தார் சுரதா.

பாரதிதாசனாரை ஆசானாக ஏற்றுக்கொண்டு, அவரின் நினைவைத் தாங்கும் வண்ணம், 'சுப்புரத்தினம்' என்ற பெயருடன் 'தாசன்' என்று இணைத்து சுரதா ஆனார் நம் கவிஞர்.

பாவேந்தரின் புகழ்பெற்ற 'புரட்சிக்கவி' பாவியம், நாடகமாக நடத்தப்பட்டபோது அதில் அமைச்சராக நடித்தவர் சுரதா. அந்நாடகம் தந்தை பெரியார், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டது.

1947ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த 'பொன்னி' இதழில் பிரசுரமான சுரதாவின் 'சொல்லடா' எனும் கவிதை அவரை அடையாளம் காட்டியது.

'தலைவன்' என்ற இதழின் ஆசிரியர் நாராயணன்; அவ்விதழின் துணை ஆசிரியர் சுரதா. இதுவும் புதுக்கோட்டையில் வெளிவந்தது.

அக்காலகட்டத்தில் திருலோக சீதாராம் என்பவர் நடத்திய 'சிவாஜி' இதழில் இவரின் பல கவிதைகள் வெளிவந்தன.

சுரதாவின் முதல் நூல் 'சாவின் முத்தம்' இது 1946 மார்ச் திங்களில் வெளியானது.

1954இல் கலைஞரின் முரசொலி இதழில் சுரதாவின் கவிதைகள் வெளிவந்தன.

1955இல் ‘காவியம்’ எனும் வார இதழை நடத்தினார்.

1956இல் ‘பட்டத்தரசி’ எனும் பாவிய நூலை வெளியிட்டார்.

1958ஆம் ஆண்டு ‘ஊர்வலம்’

1963ஆம் ஆண்டு ‘விண்மீன்’

1964ஆம் ஆண்டு ‘சுரதா’

- ஆகிய கவிதை இதழ்களை நடத்தினர்.

1974ஆம் ஆண்டு சுரதாவின் தொகுக்கப்பட்ட கவிதை நூல் ‘சுவரும் சுண்ணாம்பும்’ வெளியானது. இக்கவிதைகள் ஆனந்த விகடனில் வெளிவந்தன, வரவேற்பையும் எதிர்ப்பையும் சந்தித்தன.

1966ஆம் ஆண்டு இவர் ‘தமிழ்க் கவிஞர் மன்ற’த்தின் தலைவரானார்.

அக்காலத்தின் திரைப்படங்களில் மிக இனிமையான பாடல்கள் எழுதுவபர்களில் கு.சா.கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர். அவர்தான் சுரதாவை திரையுலகிற்கு அறிமுகம் செய்தவர்.

‘மங்கையற்கரசி’ எனும் திரைப்படம் இவர் உரையாடல் எழுதி வெளிவந்த படம்.

“கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே, இன்ப காவியக்கலையே ஓவியமே” - “அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே” போன்ற சுரதாவின் பாடல்கள் இன்றும் அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறன.

சுரதா பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருக்கிறார். 1969ஆம் ஆண்டு இவரின் ‘தேன்மழை’ நூலுக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலுக்கு 1 லட்ச ரூபாய் பரிசுடன், இராசராசன் விருதும் வழங்கியுள்ளது.

1972இல் இவருக்கு தமிழக அரசு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

1982ஆம் ஆண்டு இவரின் மணிவிழா நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அதே ஆண்டில் குன்றக்குடி அடிகளார் சுரதாவுக்கு 'கவியரசர்' பட்டத்தை வழங்கியுள்ளார்.

1987ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு அழைப்பாளர் இவர்.

1990ஆம் ஆண்டு கலைஞர் இவருக்கு 'பாரதிதாசன் விருது' வழங்கிச் சிறப்பித்தார்.

2007ஆம் ஆண்டு இவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

2008ஆம் ஆண்டு சென்னையில் கவிஞர் சுரதாவுக்கு சிலை நிறுவப்பட்டது. அச்சிலையை கலைஞர் திறந்து வைத்தார்.

® தேன்மழை

® சுவரும் சுண்ணாம்பும்

® அமுதும் தேனும்

® எச்சில் இரவு

® சாவின் முத்தம்

® தமிழ்ச் சொல்லாக்கம்

® பட்டத்தரசி

® பாவேந்தரின் காலமேகம்

- போன்ற பல்வேறு நூலை இவர் எழுதியிருக்கிறார்.

தஞ்சை மாவட்டம், பழையனூரில் திருவேங்கடம் - செண்பகம் அம்மையாரின் மகனாகப் 1921ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாள் கவிஞர் சுரதா பிறந்தார்.

இவரின் இயற்பெயர் இராசகோபாலன்.

தன் 84ஆம் வயதில் உடல் நலிவுற்றார்.

"பிறந்தோம் என்பது முகவுரையாம்

பேசினோம் என்பது தாய்மொழியாம்

மறந்தோம் என்பது நித்திரையாம்

மரணம் என்பது முடிவுரையாம்"

- இப்படி நிலையாமையைச் சொன்ன உவமைக் கவிஞர் சுரதா அவர்கள், 2006ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20ஆம் நாள் நிலையற்ற வாழ்வில் இருந்து விடைபெற்றார் - மரணத்தைத் தழுவிக் கொண்டு.

மறக்கமுடியுமா

இவரை நாம் மறக்கமுடியுமா

சிந்தனை | செயல் | முன்னேற்றம்

கவிஞர் சுரதாவின் கவிதைகளில் குமுகாயச் சிந்தனைகள்

https://www.vallamai.com/?p=74856#google_vignette

முனைவர் ச.அருள்

முன்னுரை

மனிதன் சமுதாயம் என்ற அமைப்பில் இருந்து தனித்து வாழ்பவன் அல்லன். ஏனெனில் மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள், உணர்வுகள் அனைத்தும் சமுதாயத்தின் வழியேதான் நிறைவு பெறுகின்றன. பரவிக்கிடக்கும் தேவைகளைப் பெறத் தனி மனிதன் இன்னொரு மனிதனை நாடுகின்றான். தன்னுடைய உணர்வுகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொள்ளாமல், மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள எண்ணுவது மனித இயல்பு. இவ்வாறு தேவைகளும், எண்ணங்களும், தொடர்புகளும் பரிமாறப்படுவதால் சமுதாய அமைப்பு விரிவடைகிறது. கவிஞர்கள் சமுதாயத்தில் ஓர் அங்கமாகத் திகழக் கூடியவர்கள். படைப்பாளர்கள் வரிசையில் கவிஞர்களுக்கான இடம் முதன்மையானதாகும். சமுதாயத்தின் குரலைப் படியெடுத்து வெளியிடும் திறனில் கவிதைகள் தனியிடம் பெறத்தக்கன. அவ்வகையில் உவமைக் கவிஞர் சுரதாவின் கவிதைகள் வழிக் குமுகாயச் சிந்தனைகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குமுகாயம்

குமுகாயத்தில் வாழும் குடிமக்கள் ஒவ்வொருவரும் கொள்ளவேண்டிய குமுகாயச் சிந்தனை தம் குமுகாயம் அறிவார்ந்த – நேர்மையான – நல்ல வழியில் சென்று முன்னேறிச் சிறப்பதற்கான வழிவகைகளைச் சிந்தித்து செயல்படுத்த முனைதலே குமுகாயச் சிந்தனையாகும்.

எவர் ஒருவர் தம் அண்டை மக்களின் துன்பங்களைத் தம் துன்பமாக எண்ணித் துடித்து, அவற்றைப் போக்க முற்படுகிறாரோ அவரே குமுகாயச் சிந்தனையுள்ள மாந்தர் ஆவார். “குமுகாயவியலாரின் கோட்பாட்டின்படித் தனி மாந்தனின் செயல்பாடுகளிலிருந்து தான் குமுகம் உருவாகிறது என்பதை உணரமுடிகிறது. எனவே, நல்ல குமுகம் மலரவேண்டுமெனில் தனி மாந்தன் உயரவேண்டும். தனி மாந்தனின் நல்ல செயல்பாடுகளே குமுகத்தை உருவாக்குவன” “மனிதர்கள் பலர் சேர்ந்து வாழ்வது குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்தது சமூகம். சமூகத்தின் சட்ட திட்டங்கள், பழக்க வழக்கங்கள், செயல் முறைகள், ஒருவருக்கொருவர் உதவுதல், ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதே சமுதாயம் ஆகும்.” என்னும் கருத்தும் நோக்கத்தக்கதாகும். இவற்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட தனி இயல்பு கொண்ட மக்கள் கூட்டத்தைச் சமூகம் என்றும், சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் கணக்கில் கொண்ட பொது ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு வாழும் சமூகக் குழுக்களைச் குமுகாயம் என்றும் பிரித்து அறியமுடிகிறது.

சாதிப்பாகுபாடு

சமுதாயம் என்பது உணவு, உடை, மொழி, பண்பாடு முதலியவற்றின் அடிப்படையில் அமைவதாகும். இவற்றால் ஒன்றிணைந்திருந்த தமிழ்ச் சமுதாயம் சாதியாலும் சமயத்தாலும் பல பிரிவாகிப் போராடுவதைக் காணமுடிகிறது. இந்தியச் சமுதாயத்தையும் பெரிதாகப் பீடித்திருக்கும் நோய்களுள் ஒன்று சாதிப்பாகுபாடு. "இந்தியாவில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகள் காணப்படுகின்றன. இச்சாதிகள் ஒவ்வொன்றும் மற்ற சாதிகளில் இருந்து தாங்கள் மேம்பாடுடையவையென நிலை நாட்ட விழைகின்றன" இக்கூற்றின் மூலம், இந்தியாவில் உள்ள சாதிப்பிரிவுகளையும், சாதியின் இயல்பையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

தொடக்க காலத்தில் சமுதாயத்தில், பிறப்பால் வேற்றுமை பாராட்டும் சாதிமுறை இல்லை. பிற்காலத்தில் ஏற்பட்ட சமயப் பிரிவுகளே இச்சாதி முறையைப் புகுத்தியுள்ளன. இதனை, "ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ்நாட்டில் சாதிமுறை என்பதே இல்லை" என்னும் கூற்றும், "மதமே வாழ்க்கையாகக் கொண்டிருந்த ஆரியர் வந்த பிறகுதான் தமிழ்நாட்டில் சாதி தோன்றியது" என்னும் கூற்றும் உறுதி செய்கின்றன. "ஆரியர் வருகையால் வருணம், ஏற்றத்தாழ்வுகள் முதலியன வந்து புகுந்து தமிழ்ச் சமுதாயத்தைச் சிதறடித்தன." ஒன்றாக இணைந்திருக்க வேண்டிய சமுதாயம் பிரிந்து பாழ்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இதனை, உவமைக் கவிஞர் சுரதா கடுமையாகச் சாடுவதுடன், சாதி அமைப்பால் சிலர் உயர்ந்தோர் எனக் கூறிக் கொள்வதையும் கண்டிக்கின்றார்.

"செரிக்காத சோறாகும் மனித னுக்கே
தேவையற்ற சாதிமதம்................"

இதில், சாதி வேறுபாடுகளைப் புகுத்த சமயமும் துணைநிற்கிறது என்பதால் அதனையும் சேர்த்தே கண்டித்துள்ளார். பண்டைக் காலத்தில் வேதங்களைப் பின்பற்றி நடந்த பிராமணர்களை 'வேதியர்' என்று அழைப்பது மரபாக இருந்துள்ளது. ஆனால், இன்று எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் வேதங்களையும் இந்துசமய சாத்திரங்களையும் தழுவி நடப்போரை வேதியர் என அழைக்கலாம். இதனை,

"ஜாதி மதங்களைப் பாரோம்..................
வேதியர் ஆயினும் ஒன்றே, அன்றி
வேறு குலத்தவர் ஆயினும் ஒன்றே"

என்று பாரதியார் பாடியுள்ளார். சமுதாயச் சீர்திருத்த எண்ணம் கொண்ட பாரதி, இந்தியாவில் காணப்பட்ட ஒற்றுமை இன்மைக்குக் காரணம் சாதி, சமய வேறுபாடுகள் என்று உணர்ந்து, அந்தணர், அந்தணர் அல்லாதவர் ஆகிய எல்லாரும் ஒன்றே என்னும் கருத்தில் சாதி, சமயம்அற்ற சமுதாயம் அமையக் குரல் கொடுத்துள்ளார். பாரதியின் தாசனுக்குத் தாசனான சுரதா,

"சாதியென்பார், மதமென்பார், சங்க டத்தைச்
சடங்கென்பார், சாத்திரகோத் திரங்க ளென்பார்
நீதியென்பார், மனுநீதி சிறந்த தென்பார்
நிலையற்ற உடலென்பார் நெய்பால் உண்பார்
வேதியர்யாம் வீதியர்நீர் என்பார் எல்லாம்
விதியென்பார் வினையென்பார் வேத மென்பார்
ஓதுகலை ஒருசிலர்க்கே உரிய தென்பார்
ஊழ்வினையே வையத்தின் வரலா றென்பார்"

என்று பாடியுள்ளார். இதில், சாதி, மதம், சடங்கு முறை, சாத்திரம், மனுநீதி, விதி, வேதம், ஊழ்வினை ஆகியவை நையாண்டிக்கு உரியவை என எடுத்துரைத்துள்ளார்.

இந்து சமயத்தில் பிறவியிலேயே, சாதியும் உடன் பிறக்கிறது. நிறத்தால் அழகாக இருப்பதாலேயே ஒருவரை உயர்ந்தோர் எனக் கூறிவிட முடியாது. ஒரு மனிதனை உயர்ந்தோன் ஆக்கிக் காட்டுவது அவனுடைய பண்பாடே ஆகும். இதனை,

"நிறத்தாலே பிறப்பாலே சிறந்தோர் என்று
நினைப்பவ ரெல்லாங்கடையர் மடயர் மேனி
நிறத்தாலே அந்தணர்கள் சிறந்தா ரேனும்
நினைப்பாலே உயராதார் மேலோர் ஆகார்"

என்று சுரதா சுட்டியுள்ளார்.

பண்டைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் சாதிப் பிரிவுகள் இருந்ததில்லை. பிற்காலத்தில் புகுத்தப்பட்டவையே இப்பிரிவுகள். ஆனால், தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் தமிழர்கள் இதனை உணரவில்லை. எடுத்துச் சொன்னாலும் அவர்களுக்குப் புரியவில்லை. எனவே, இக்கருத்தினைத் தமிழர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதை,

"............................... கலப்பை மூலம்
நிலத்தில்நாம் உண்டாகும் கலப்பை மாந்தர்
நெஞ்சத்தில் உண்டாக்கி விடுவோ மாயின்

கலப்புமணம் உருவாக வழியுண் டாகும்
கலப்புமணத் தால்சாதி செத்தே போகும்”

என்னும் கவிதை வழி வெளிப்படுத்தியுள்ளார். இதில், கலப்பு மணம் செய்தால் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்கிறார்.

உடன்கட்டை ஏற்றுதல்

பெண்களுக்கு ஏதிரான ஆண்களின் வன்முறைகளில் ஒன்றுதான் உடன்கட்டை ஏற்றுதல். கணவன் இறந்தஉடன் உடன்கட்டை ஏறும் பெண்கள் குறித்து இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியம்,

“நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்”

என்று சுட்டியுள்ளது. அஃதாவது கணவனின் இறந்த உடலுடன் கூடவே எரிமூழ்கிய அவள் சமுதாயத்தில் முழுமையான நல்லபெண் ஆகிவிடுகிறாள். இதில், ‘நல்லோள்’ என்னும் சொல் கணவனுடன் எரிபுகும் பெண்ணைக் குறிக்கக் கையாளப்படிருக்கிறது.

“தம்முடன் இறக்கும் மனைவி, வேலைக்காரர், குதிரை போன்றவை தம்முடன் மறுஉலகுக்குச் செல்கின்றன என நம்பப்பட்டு வந்தது. ஆகவே பிரதானி ஒருவன் இறந்தபோது அவன் மனைவி வேளையாள் முதலியோரும் உடன் வைத்துக் கொளுத்தப்பட்டார்கள் அல்லது புதைக்கப்பட்டார்கள்” மனைவியை உடன்கட்டை ஏற்றுவதற்கு வேறு காரணமும் இருந்தது எனலாம். கணவன் இறந்தபின் அவன் மனைவி பிற ஆடவனைக் கணவனாகக் கொண்டு வாழ்வாள் என்னும் பொறாமைக் குணம் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்திருக்கலாம். கணவன் இறந்தபின் குழந்தை இல்லாத மனைவிக்குச் சொத்துரிமைச் சென்று விடக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். இதனால் பெண்களை உடன்கட்டை ஏற்றியிருக்கலாம்.

நாட்டில் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் வரையறுக்கப்பட்டுள்ளன. மனைவி இறந்தால், கணவன் கிழவனாக இருந்தாலும் மறுமணம் செய்து கொள்ளலாம். அவன், கன்னிப் பெண்ணாக இருந்தாலும் அவளை மணந்து கொள்ளலாம். ஆனால், கணவனை இழந்த பெண், இளமையுடன் இருந்தாலும் அவள் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. கணவன் இறந்தஉடன் அவனுடன் உடன்கட்டை ஏறிவிட வேண்டும்.

இக்கொடுமையைக் கண்டு கொதித்துஎழும் கவிஞர் சுரதா,

"பால்நிலவுப் பத்தினியும் பாடைமீது
படுப்பானேன்? உடன்கட்டை ஏறு வானேன்?
வேல்தொடரும் விழியுடையாள் கணவ னோடு
வெந்துவிட வேண்டுமென்ப தென்ன நியாயம்"

"புடம்போட்ட பசும்பொன்னைப் போன்ற பெண்கள்
பூவோடும் பொட்டோடும் மஞ்ச ளோடும்
உடன்கட்டை ஏறிவரும் வழக்க மிங்கே
உண்டென்ப தறிவீர்நீர் ஆய்ந்து பார்த்தால்
முடம்பட்ட நெஞ்சத்தார் புகுத்தி விட்ட
முழுமூடத் தனமென்ற முடிவே தோன்றும்"

என்னும் கவிதைகள் வழியாகச் சமுதாயத்திற்குச் சாட்டையடி கொடுத்துள்ளார். இவ்வாறு பெண் குலத்தைத் தீயிட்டுக் கொளுத்திய கொடுமைக்குக் காரணம் மக்களின் மூடத்தனமே எனக் கூறியுள்ளார். இம்மூடத்தனத்திற்குப் பலியான சிலரையும் எடுத்துக்காட்டுகின்றார். இதனை,

"சித்திரப்பெண் பத்தினியும் காஷ்மீ ரத்தில்
சிற்சிலரும் செஞ்சியிலோர் பதுமைப் பெண்ணும்
கத்துகடல் முத்தரசன் ராச ராசன்
காலத்து மங்கையரும் தீயில் தூங்கிச்
செத்ததைநாம் வரலாற்றில் அறிவோம் அன்னார்
தேன்வாழ்வை ஏன்கெடுத்துக் கொண்டா ரென்றால்
பத்தினிமார் உடன்கட்டை ஏறிச் செத்தால்
பரலோகம் கிட்டிடுமாம் எனவே செத்தார்"

என்னும் கவிதை வழி அறியலாம். முடிவாகக் கவிஞர்,

"சித்திரத்தேர் தீப்பற்றி எரிதல் போன்ற
தீச்செயலைத் தடுப்பீரென் றெண்ணு கின்றேன்"

என்று எடுத்துரைக்கின்றார்.

குடும்பமும் கல்வியும்

குடும்பம் என்னும் நிறுவனத்தின் நங்கூரமாகப் பெண்ணே கருதப்படுகிறாள். குடும்பத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதாகிவிட்டது. பெண், தன்னுடைய குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் அடித்தளமிடுபவள் ஆகிறாள். குழந்தையின் மழலை மொழியினைத் திருவள்ளுவர்,

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்”

என்று எடுத்துரைப்பார். மனைவி இல்லாதவன் வாழ்க்கை கரும்பின் பூவைப் போன்றது. புத்தகம், முத்தமிடும் மனைவி, மழலைமொழி பேசும் மக்கள் இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சிறப்பினைத் தருவதாகும். புத்தகம் வாசிப்பதால் மனிதன் முழுமையான அறிவு பெறுகிறான். இதனை,

“புத்தகங்கள் முத்தமிடும் மனைவி சொற்கள்
புரியாத மழலைமொழி பேசும் மக்கள்
இத்தரைமீ தினில் ஒவ்வோர் மனிதனுக்கும்
இருப்பதுவே சிறப்பாகும் இருக்கு மாயின்
புத்தகத்தால் பேரறிவும் குழந்தைப் பேச்சால்
பூரிப்பும் மனைவி யினால் சுகமும் சேரும்
எத்தனைபேர் இருந்தென்ன? மனைவி யில்லான்
இல்வாழ்க்கைக் கரும்புக்கு வெறும்பூ வன்றோ?”

என்னும் கவிதை வரிகள் மெய்ப்பித்துக்காட்டுகின்றன. மனிதனின் நுகர்வுக்கு வேண்டியனவற்றையும் அவற்றை எந்தந்தத் தருணத்தில் பெற வேண்டும் என்பதையும் அறுதியிட்டுக் கூறுகிறார். இதனை,

“திருமண வாழ்க்கையே சிறந்த பதிப்புரை
ஓரெட்டில் உணவும், ஈரெட்டில் கல்வியும்
மூவெட்டில் புதல்வனும் நாலெட்டில் பொருளும்
ஐயெட்டில் ஞானமும் அடைவதே சிறப்பாம்”

என்னும் கவிதைக் காட்சிப்படுத்தியுள்ளது.

பெண்மை

பெண் உரிமையோடும் பெருமையோடும் கடமை உணர்வோடும் கண்ணியத்தோடும் இருக்க வேண்டும் எனக் கருதிக் கவிதைப் புனைந்தவர் சுரதா. காதலை மிகுதியாகப் பாடிப் பெண்ணின் அழகை நுட்பமாகப் பல்வேறு சொற்களால் புனைந்திருந்தாலும் பெண்கள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர். என் கடமை, என்னும் கவிதையில் ஒரு பெண் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்பதை,

“ஒளிவீசும் காலையில்நான் எழுந்திருந்து
நுரைசெய்யும் ஆற்றில்நீ ராடச் செல்வேன்
நுணுக்கமுள்ள ஆசாரக் கோவை கூறும்
வரிவெண்பா நீதியைப்பின் பற்றி வாழ்ந்து
வருவதனால் நீரில்நான் உமிழ மாட்டேன்

..

ஊரறிந்த பேரறிஞர் மேடைப் பேச்சை
ஒருநாளும் நான்கேட்கத் தவற மாட்டேன்
பாரறிந்த பைந்தமிழை அழிக்க வேண்டிப்
படைவந்தே எதிர்த்தாலும் அஞ்ச மாட்டேன்"

என்று விரிவாகப்பாடியுள்ளார்.

மனைவிக்குக் கணவன்மேல் உண்மையான காதல் இருக்க வேண்டுமென்றால், அவளுடைய மனத்திற்குப் பிடித்தவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இருத்தல் வேண்டும். எப்படிப்பட்டவனைக் கணவனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும் அவளே தீர்மானிக்க வேண்டும். யாரைக் கணவனாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை விட யாரைக் கணவனாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும் தமிழ்ப் பெண் ஒருத்தி கூறுவதாக,

"தேய்புரி பழங்க யிற்றைப்
போன்றானைச் சிறப்பில் லானை
வாய்மையும் சிறந்த வாக்கு
வன்மையும் இல்லா தானை
நோய்மத வெறிகொண் டானை
நுண்ணறி வில்லா தானைத்
தாய்மொழிப் பற்றில் லானைத்
தையல்நான் மணக்க
மாட்டேன் ....
....
.... அறிவில் மூத்தோன்
வடித்தநூ லான முப்பால்
திருக்குறள் கல்லா தானைத்
திருமணம் செய்து கொள்ளேன்"

என்று சுரதா கூறியுள்ளார். இந்தக் கவிதை வரிகள் ஒவ்வொன்றும் சிந்திக்கத்தக்கனவாக அமைந்துள்ளன.

ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது மக்களின் வாழ்வியலை முறைப்படுத்துவதில் முதன்மையானதாகத் திகழ்ந்து உயிரினும் மேலானதாகக் கருதப்படுகிறது. ஒழுக்கமுடைய வாழ்வே உயர்ந்த வாழ்வு என்பது பண்டையத் தமிழரின் கொள்கையாகும். மனிதனுக்கு புறத்தூய்மை, அகத்தூய்மை ஆகிய இரண்டும் வேண்டும். புறத்தூய்மை உடல் நோய்கள் வராமலும், அகத்தூய்மை அகநோய்கள் வராமலும் காக்கும். எனவே, அகமும் புறமும் தூய்மையாக இருத்தலே உயர்ந்த நாகரிகம். திருவள்ளுவர்,

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்ற கூறுகின்றார். புறத்தூய்மையை உடனடியாகக் கண்டுகொள்ள முடியும். அகத்தூய்மையைப் படிப்படியாக, அவரவர் நடத்தையின் மூலமே அறிந்துகொள்ள இயலும். ஒருவன் சமுதாயத்தில் வகிக்கும் பதவியையோ, செய்யும் தொழிலையோ வைத்து அவனுடைய அகத்தூய்மையை உறுதிப்படுத்தி விடக்கூடாது. வெளிஉலகிற்கு நல்லவனாகக் காட்சியளிக்கும் ஒருவன் அகத்தில் அழுக்கு நிறைந்தவனாக இருக்கலாம். இதனை,

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும்,
கதவுள்ள போதே சாத்திக் கொள்ளவும்,
நன்கு தெரிந்த நடிகை ....
நித்தம் இருமுறை நீராடு வாராம்
விடிந்ததும் ஒருமுறை வெந்நீரில் குளியலாம்
எல்லாம் முடிந்தபின் இன்னொரு குளியலாம்

....

ஆடை பாதியும் அழகு பாதியும்
தெரியக் காட்டும் திரைப்பட நடிகையோ,
அறிஞனோ, கலைஞனோ, அரசியல் தலைவனோ,
மடாதி பதியோ, மக்கள் திலகமோ,
கோப்பைக் கவிஞனோ, கோயில் குருக்களோ,
மற்றிங்கு வாழும் மக்கள் கூட்டமோ,
ஆயிரம் தடவை அன்றாடம் குளிப்பினும்
மிகத்தூய்மை பெறுவது மேனியே யன்றி
அகத்தூய்மை நீரால் அமைவ தில்லையே"

என்னும் பாடல்களில் சுரதா சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கவிதையில் பலரையும் குறிப்பிடும் கவிஞர், அறிஞனையும் சேர்த்துக் கூறுகின்றார். பண்பாட்டை அறிவு உருவாக்கும், ஆனால் சில சமயம் தீமையைக் கூர்மைபடுத்தி விடுவதும் உண்டு. உணர்ச்சியைச் செம்மைப்படுத்தத் தவறிவிடுவதும் உண்டு. எனவே, தான் ஆங்கிலத்தில் 'Intellectual Giants are moral Pygmies' என்னும் பழமொழி வழங்குகிறது. 'அறிவில் வானளாவ உயர்ந்திருப்பவர்களும் ஒழுக்கத்தில் குள்ளராக இருப்பதுண்டு'.

குடும்பக்கட்டுப்பாடு

செல்வங்களில் சிறந்தது குழந்தைச் செல்வம். ஆனால் அளவில் மிஞ்சினால், அதுவே குடும்பத்திலும், பின்பு நாட்டிலும் வறுமையைத் தோற்றுவிக்கும். மக்கள்தொகைப் பெருக்கம் இன்று உலகை மிரட்டும்

சிக்கலாக மாறி வருகிறது. 138 கோடி மக்களைக் கொண்டுள்ள சீனா, உலகிலேயே அதிகபட்ச மக்கள் தொகையைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது. குறிப்பாக, சீனாவில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக் கொள்ளத் தம்பதியருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்போது சீனாவில் குடும்பக் கட்டுப்பாட்டு விதி தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் நிலையில், வருங்கால நலனைக் கருத்தில் கொண்டு, குடும்பக்கட்டுப்பாட்டு விதியைத் தளர்த்த சீன அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, மக்கள்தொகைப் பெருக்கத்தை உலக நாடுகள் கட்டுப்படுத்த வில்லையானால் உலகில் வறுமை, பஞ்சம், பட்டினி, நோய் போன்றவை பெருகும். இந்த எச்சரிக்கையை முற்போக்குச் சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்திய அரசும் இதனை ஏற்று செயல்படுத்தி வருகிறது. இந்தக் கொள்கையைப் பெரியார், "பெண்கள் விடுதலையடையவும், சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள், பெண்கள் உடல்நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் தாட்டீகத்தை உத்தேசித்தும், நாட்டின் பொருளாதார நிலையை உத்தேசித்தும் குடும்பச் சொத்துக்கு அதிகப் பங்கு ஏற்பட்டுக் குறைந்தும், குலைந்தும் போகாமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகிறார்கள்"[25] என்று எடுத்துக் கூறியுள்ளார். பெரியாரின் சிந்தனையை அடியொற்றி கவிதைகள் படைத்து வந்த பாரதிதாசன்,

"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன
குற்றம்?"

என்று பாடியிருக்கிறார். இதே சிந்தனையை, அவருடைய மாணவரான உவமைக் கவிஞர் சுரதா,

"பெருக்கெடுக்கும் உணர்ச்சியினால் ஒன்று பத்தாய்ப்
பெற்றெடுக்கும் குழந்தையெனும் கொழுந்தின் கூட்டம்
நெருக்கடியின் அடையாள மன்றோ? அந்த
நெருக்கடிக்கிங் கிடங்கொடுத்தால் குடும்ப வாழ்வே
சருக்குநிலம் ஆகிவிடும் அதனால், பெற்றோர்
தயவுசெய்து குடும்பநலம் காக்க வேண்டும்"

என்று பாடுகிறார். மக்கள் செல்வம் மிகுதியானால், அறிவையும், கற்பனை வளத்தையும் குறைத்துவிடும் என்றும், அதனால் குடும்பத்தில் வறுமையும், நிம்மதியின்மையும் தோன்றும் என்றும் எடுத்துரைக்கின்றார்.

முடிவுரை

சாதி, சமய வேறுபாடுகளைக் கண்டிக்கும் கவிஞர், அவை மானிட சமூகத்திற்குத் தேவையற்றது எனச் சாடியுள்ளார். நிறத்தாலும், பிறப்பாலும் உயர்ந்தோர் என்று எண்ணக் கூடியவர்களை மடையர்கள் எனக் கண்டித்துள்ளார். பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்து, இந்த மூடத்தனமான கொடுமையைத் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். குடும்பத் தலைவனுக்கு மனைவியும் மழலையும் தரும் மகிழ்வும், புத்தகங்கள் தரும் அறிவும் அலாதியானவை என்பதைக் கவிதை வழி வெளிப்படுத்தியுள்ளார். இல்லாள் இல்லாதவனை இருந்தும் பயன் இல்லாதவன் என ஏளனமாகக் கூறியுள்ளார். தனக்குப் பிடித்தவனைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமையும், தனக்குப் பிடிக்காதவனைத் தானே நிராகரிக்கும் உரிமையும் பெண்களுக்கு வேண்டும் எனக் குரல் கொடுக்கின்றார். மகளிர் தம் அன்றாட வாழ்வில் எவற்றை எல்லாம் கடைபிடித்து வாழ வேண்டும் எனப் பட்டியலிடுகின்றார். ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகக் கருதும் கவிஞர் சுரதா, ஒழுக்கம் இல்லாதவனை உள்ளத்தில் அழுக்கு நிறைந்தவனாகக் காட்சிப்படுத்தியுள்ளார். மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, தாய்மார்கள் குழந்தைச் செல்வங்களை அளவோடு பெற்றுக்கொள்ள அறிவுரை கூறும் கவிஞர், குடும்பக்கட்டுப்பாட்டுச் சிந்தனையையும் விதைத்துச் சென்றுள்ளார்.

தி ண் ணை

தமிழின் முதல் இணைய வாரப்பத்திரிகை

https://puthu.thinnai.com/2011/10/17/%e0%ae%8e%e0%ae%a9%e0%ae%a4%e0%af%81-%e0%ae%87%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%bf%e0%ae%af-%e0%ae%85%e0%ae%a9%e0%af%81%e0%ae%aa%e0%ae%b5%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d-20/

எனது இலக்கிய அனுபவங்கள் – 20 எழுத்தாளர் சந்திப்பு – 7. சுரதா

By வெ சபாநாயகம்

அக்டோபர் 1968ல், கவிஞர் சி.மணியின் 'நடை' முதல் இதழில் கண்ணன் என்பவர் 'அகவன் மகளும் அகவும் மயிலும்' என்றொரு கட்டுரை எழுதி இருந்தார். கவிஞர்சுரதாவின் 'தேன்மழை' என்னும் கவிதைத் தொகுப்பில் 'மயில்' என்னும் கவிதையின்முதல் வரியான, 'அகவும் மயிலே! அகவும் மயிலே!' என்பதை குறுந்தொகையில் வரும் ஔவையாரின் கவிதையின் முதல் வரியான'அகவன் மகளே! அகவன் மகளே!'என்பதுடன் ஒப்பிட்டு எழுதப்பட்ட விமர்சனக் கட்டுரை அது. அதில் ஔவையின்கவிதையால் தூண்டுதல் பெற்ற சுரதாவின் கவிதை அந்தத் தரத்தை எடடியிருக்கிறதாஎனபதுதான் விமர்சனத்தின் மையம்.

அப்போது நான் சென்னை சென்றிருந்தேன். வழக்கம்போல இலக்கிய அன்பர்ஒய்ஆர்.கே சர்மா அவர்களைச் சந்தித்து, இருவருமாய் வாலாஜா சாலை வழியாக திருவல்லிக்கேணியில் இருந்த கவிஞர் ஞானக்கூத்தன் அறைக்குச் சென்றுகொண்டிருந்தோம். அப்போது எதிரே அதே சாலையில் – ஜிப்பாவுடனும் தோளில்சால்வையுடனும் வந்து கொண்டிருந்த ஒருவரைக் காடடி, "அதோ சுரதா வருகிறார்.வாருங்கள் அறிமுகப்படுத்துகிறேன்" என்று அழைத்தார். நாங்கள் சாலையில் இறங்கிஅவரைச் சந்தித்தோம். சர்மாவை முன்பே அறிந்திருந்த சுரதா எங்களது வணக்கத்துக்குப் பதில் வணக்கம் செய்து விட்டு "என்ன செயதி?" என்றார். சர்மா என்னை அறிமுகம்செய்து வைத்தார். சுரதா தலையை மட்டும் அசைத்தாரே தவிர என்னை அதிகம் கண்டுகொள்ளவில்லை. சர்மா 'நடை'யில் வந்துள்ள அவரைப் பற்றிய விமர்சனத்தைச்சொன்னார். "என்ன எழுதியிருக்கான்?" என்றார் ஒருமையில். 'அமுதும் தேனும் எதற்கு?', 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' என்பன போன்ற அற்புதமான பாடல்களை எழுதியவரைச் சந்தித்த மகிழ்ச்சியில் இருந்த எனக்கு, சற்று அதிர்ச்சியாக இருந்தது.

சர்மா அவரிடம் மேற்கொண்டு பேசியதில் எனக்கு சுவாரஸ்யம் ஏற்படவில்லை.சுரதாவிடம் விடை பெற்றுக் கொஞ்ச தூரம் நடந்ததும்,

“என்ன இப்படி ஒருமையில்பேசுகிறார்?” என்றேன். “அவர் அப்படித்தான்! அதையெல்லாம் பொருட்டுத்த வேண்டாம்” என்றார் சர்மா

பிறகு 18 ஆண்டுகளுக்குப் பின், மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மகாநாட்டின் போது, மீண்டும் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அந்த மகாநாட்டுக்கு கல்வித் துறையிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரும் ஒரு தமிழாசிரியரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அதன்படி விருத்தாசலம மாவட்டத்தின் பிரதிநிதியாக நான் அழைக்கப்பட்டிருந்தேன்.விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குரிச்சி மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்‘கவிஞர் செ.வ’ என்று அறியப்பட்டிருந்த புலவர் செ.வரதராசன் அவர்களை மாநாட்டில் சந்தித்தேன். அவர் ஒத்த இலக்கிய ரசனை காரணமாக என்னோடு நீண்ட நாட்களாக நட்புக் கொண்டவர்; கவிஞர் சுரதாவின் அன்பர். அன்று மாலை, தான் கவிஞர் சுரதாவைஅவர் தங்கி இருக்கும் விடுதியில் சந்திக்க இருப்பதாகவும் என்னையும் அழைத்துப்போய் அறிமுகப்படுத்துவதாகவும் அழைத்தார். சுரதா அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முனபே சந்தித்திருந்ததையும் அப்போது அவர் என்னைக் கவனிக்கவில்லை என்றும்சொல்லி, அன்றிரவு அவரைச் சந்திக்க ஒப்புக் கொண்டேன்.

அதன்படி அன்றிரவு 8 மணியளவில் இருவரும் சுரதா அவர்கள் தங்கி இருந்த விடுதிக்குச் சென்றோம். அவரது அறைக்குள் நுழையுமுன் செ.வ அவர்கள்என்னிடம்,“கவிஞரைப் பார்க்கும்போது அவரது நூல் ஒன்றை வாங்கினால் மகிழ்ச்சி அடைவார்” என்றார். எனக்கு அதில் விருப்பமில்லை என்பதை என் முகமாற்றத்திலிருந்து உணர்ந்து, “உங்களுக்கும் சேர்த்து நானே தந்து விடுகிறேன். நீங்கள் அவரிடமிருந்து புத்தகத்தை மட்டும் வாங்கிக்கொண்டால் போதும்” என்றார்.

உள்ளே நுழைந்து வணக்கம் தெரிவித்த பின், கவிஞரிடம் என்னைப் பற்றிச் சொல்லிஅறிமுகப்படுத்தினார் செ.வ. என்னை முன்பே பார்தத நினைவு அவரிடம் இருப்பதாகத்தெரியவில்லை. நானும் அது பற்றிச்

சொல்லவில்லை. எடுத்தவுடனேயே, “நீங்க என்ன ஜாதி?” என்று கேட்டார் சுரதா. எனக்குக் கொஞ்சம் கசப்பாக இருந்தது. அதிருப்தியுடன் செ.வ வைப் பார்த்தேன். ஜாதியைச் சொல்வதில் எனக்குக் கூச்சம் ஏதும் இல்லைஎன்றாலும் அந்தக் கேள்வி, சாதிமறுப்புச் சிந்தனையாளர் புரட்சிக்கவிஞரின் தாசனான (‘சுப்புரத்தினதாசனா’ன) சுரதாவிடமிருந்து வரும் என்று நான் எதிர் பார்க்கவில்லை.செ.வ என் தயக்கத்தை உணர்ந்து எனக்குப் பதிலாக அவரே பதில் சொன்னார். அத்தோடுவிடவில்லை கவிஞர்! “அங்க எட்மாஸ்டர் ஒருத்தன் – செவிடன் – உடையான் ஒருத்தன் இல்லே.....?” என்று ஒருமையிலும் நாகரீகமற்றும் கேட்டார். எனக்கு எரிச்சல் ஏற்பட்டது.

அவர் விசாரித்தவர் என் சக தலைமை ஆசிரியர்; சற்று செவிப்புலன் குறையுளவர்.ஜாதியைக் குறிப்பிட்டதுடன் ஒருவரது ஊனத்தைச் சொல்லிக் கேட்பது அநாகரீகத்தின்உச்சம் என்று பட்டது. இதற்கும் செ.வ வே பதில் சொன்னார். அதற்கு மேல் அங்குஇருக்க எனக்கு விருப்பமில்லை. எழுந்து போக முயற்சித்தேன். ஆனால் செ.வ என்கையைத் தொட்டு, கண்களால் பொறுத்துக் கொள்ள ஜாடை காட்டினார். ஆனால் கவிஞர் என் முக மாற்றம், அதில் தென்பட்ட அதிருப்தி எதையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மேற்கொண்டு அவர் செ.வ வுடன் பேசிய எதையும் நான் கவனிக்கவில்லை. பின்னர்அவரிடம் எனக்கும் என்று சொல்லிப் பணம் கொடுத்த இரண்டு புத்தகங்களை வாங்கிக்கொண்டு விடை பெற்றார் செ.வ..வெளியே வந்ததும் அவரது பண்பாடற்ற பேச்சு பற்றியஎன் அதிருப்தியை செ.வ விடம் தெரிவித்தேன். “அவர் அப்படித்தான். அதைப்பொருட்படுத்த வேண்டாம். எல்லா மேதைகளிடமும் இப்படி ஏதாவது ஒரு குறைபாடு இருக்கவே செய்கிறது” என்று சர்மாவைப் போலவே சொல்லி என்னைச் சமாதானபடுத்தினார்.

அடுத்த சந்திப்பு பிறகு சில ஆண்டுகள கழித்து கள்ளகுறிச்சியில கவிஞர் ஆராவமுதன் அவர்களது பாராட்டு விழாவில் நடந்தது. அவ்விழாவிற்குத் தலைமை தாங்க வந்திருந்தார்சுரதா. விழா தொடங்கு முன்னரே வந்து மேடையின் எதிரே அமர்ந்திருந்தவரின் அருகில், ஆராவமுதன் என்னை வரவேற்று அமரச் செய்து அவருக்கு என்னை அறிமுகம் செய்தார்.இப்போதும் கவிஞருக்கு என்னை முன்பே பார்த்த ஞாபகம் இல்லை போலும்! தலை அசைப்பு மட்டுமே செய்தார். உடனே தன் கைப்பையைத் திறந்து ஒரு ரசீது புத்தகத்தை எடுத்து அதில் ஏதோ எழுதிக் கிழித்து என்னிடம் கொடுத்தார் – விசிட்டிங் கார்டைக் கொடுப்பது போல. அந்த ரசீதைப் பார்த்தேன். அது அவரது மணிவிழாவிற்கான நன்கொடைக் கானது. என் பெயர் கூட அதில் இல்லை. தொகை மட்டும் ரூ.25 என்று எழுதப் பட்டிருந்தது.‘இது என்ன நாகரீகம்’ என்பது போல நிமிர்ந்து அவரைப் பார்த்தேன். அதற்குள் அவர் வேறு யாருக்கோ ரசீது எழுதிக் கொண்டிருந்தார். நான் ஏதும் பேசாமல் எரிச்சலோடு ரசீதைக்கையில் வைத்தபடி இருந்தேன். அரைமணி சென்ற பிறகு அவரை மேடைக்கு அழைத்தார்கள்.

அவர் என் பக்கம் திரும்பி கை நீட்டினார். நான் ரசீதை அவரிடம் திருப்பி நீட்டினேன். அதைஎதிர் பார்க்காத அவர் “பணம்?” என்றார். “எனக்கு வேண்டாம். நான் கேட்கலியே?” என்றேன் –அவர் மீது எனக்கிருந்த எல்லா எரிச்சல்களுக்கும் பழிவாங்குகிற மாதிரி! எதுவும் பேசாமல் கோபத்துடன் ரசீதைப் பிடுங்கிக் கொண்டு மேடைக்குப் போனார். பெயர் போடாததால் அந்த ரசீதை இன்னொருவருக்குக் கொடுத்து விடலாம்! பிறகுதான் கேள்விப்பட்டேன் –அது அவரது ஆத்மார்த்த சீடர்கள் நிரம்பிய ஊர். அவரது இத்தகைய செயல்கள் எல்லாம்அவர்களுக்குத் திருவிளையாடல்கள் போல – யாரும் அச்செயல்களுக்கு முகம் சுளிப்பதிலை என்று.

அதன் பிறகு சில நிகழ்ச்சிகளில் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் நேர்ந்ததுண்டு.

ஆனால் மறுபடியும் அவரைப் பார்ப்பதைத் தவிர்த்து விட்டேன்.

சுரதா

https://www.jeyamohan.in/22120/



கவிஞர் சுரதாவை நான் ஒரே ஒருமுறை நேரில் சந்தித்திருக்கிறேன். 1992ல், வாணியம்பாடி கலைக்கல்லூரியில் ஒரு தமிழ்விழாவுக்காக பேசச்சென்றிருந்தேன். எங்கள் பேச்சு முடிந்ததும் கவியரங்கம், அதில் சுரதா பேசுவதாக இருந்தது. நாங்கள் சென்றதுமே சுரதா வந்து கல்லூரி அறையில் காத்திருப்பதாகச் சொன்னார்கள். சென்றுபார்க்கலாமென உடனிருந்தவர்கள் சொன்னார்கள்.

எனக்கு சுரதா மீது கவிஞராக எந்தவிதமான நல்லெண்ணமும் இல்லை.பாரதிக்கு இருநூறாண்டுக்காலம் முந்தைய அழகியல் கொண்ட கவிதைகள். ஒரு கட்சிக்கொள்கை போல ஏற்றுக்கொண்ட முற்போக்கு நம்பிக்கைகள். அந்தவகை நம்பிக்கைகளுக்கெல்லாம் அர்த்தமே இல்லை

என்று எனக்கு தெரியும். அவை முழுக்கமுழுக்க மேடைக்கானவை. தனிவாழ்க்கையில் அவற்றை எவ்வகையிலும் அதைச்சொல்பவர்களும் கேட்பவர்களும் பொருட்படுத்துவதில்லை. 'நல்ல' திராவிட இயக்கத்தவரின் உதாரணமான சுரதா அவ்வகையிலேகூட பொருட்படுத்தத் தக்கவரல்ல என்பதே என் எண்ணம்.

சுரதா கல்லூரியின் ஆய்வுகூடம் போன்ற எதிலோ இருந்தார். ஒரு சாதாரண ஜிப்பா அணிந்து வேட்டியை காலிடுக்கில் சுருட்டிவைத்துக்கொண்டு காலை இரும்பு நாற்காலியில் தூக்கி வைத்து அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். கூடநாலைந்துபேர் இருந்தார்கள். நாங்கள் உள்ளே சென்றதும் எங்களை அறிமுகம்செய்துவைத்தார்கள். சுரதா என்னைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லை. அவர் கேட்ட முதல் கேள்வியே 'தம்பி என்ன சாதி?' என்பதுதான்.

அவர் மட்டுமல்ல கணிசமான பழைய திராவிட இயக்கத்தவர் அந்தக் கேள்வியைத்தான் முதலில் கேட்பார்கள் என எனக்குத்தெரியும். நான் பிராமணனா தலித்தா என்பதுதான் அந்தக்கேள்வியின் சாராம்சம். இரண்டில் எதுவாக இருந்தாலும் என்னிடம் ஜாக்ரதையாகப் பேசவேண்டும். ஒவ்வொரு சாதிக்கும் வட்டாரம் சார்ந்து குணவேறுபாடுகளை கணித்தும் வைத்திருப்பார்கள். நான் சொன்னேன். 'மலையாளத்தானா?' என்றார் ஆர்வமில்லாமல்.

நாகர்கோயில் என்றதுமே சுந்தர ராமசாமி நினைவுக்கு வந்தது அவருக்கு. 'அய்யிரு என்னையப்பத்தி சொல்லியிருக்காரு தெரியுமில்ல...' என்றார். சுபமங்களாவில் வந்த பேட்டியில் சுந்தர ராமசாமி சுரதாவை குறிப்பிட்டிருந்தார். சுரதா பெருமை பொங்க 'என்னையப்பத்தி நல்லாத்தான் சொல்லியிருக்காரு...அய்யமாரு அதையெல்லாம் உத்து கவனிப்பானுக... அன்னிக்கும் இன்னிக்கும் அவனுகதானே வாசிக்கிறது...நம்மாளுக எவன் வாசிக்கிறான்?' என்றார்.

'நீங்க சினிமாலே வேலைபார்த்தீங்கல்ல?' என்று கேட்டேன். `ஆமாமா...நெறைய பாட்டு வசனம் எளுதினேன்.அந்தக்காலத்திலே ஒண்ணும் மதிப்பு மரியாதை கிடையாது. நாம எளுதுறத அவனவன் தன் பேருக்கு போட்டுக்குவான்...சும்மா அடைப்பக்காரன் வேலை...தம்பி சர்க்கார் உத்யோகமா?' என்றார். `ஆமாம்' என்றேன். `விட்டிராதீங்க...எலக்கியத்த நம்பி சோறு திங்க முடியாது' மீண்டும் நாகர்கோயில். நாஞ்சில்நாடனைப்பற்றி கேட்டார். `நாடாக்கமாரெல்லாம்கூட இப்ப எளுதுகானுக' அவர் நாடார் இல்லை வேளாளர் என்றேன். `அப்டியா சொல்லுறீங்க?'

சுரதா எனக்கு ஒரு கிராமத்து கிழவராக தெரிய ஆரம்பித்தார். பல எழுத்தாளர்களைப்பற்றிய வம்புகள் வந்துசென்றன. எல்லாரையும் சாதியாலேயே சுட்டிச் சொன்னார். தற்செயலாக பேச்சு செந்தமிழ்ச்செல்வி இதழைப்பற்றி திரும்பியது. அதன்பின்னர் அவர் தகவல்களாக பொழிய ஆரம்பித்தார். செந்தமிழ்ச்செல்வியின் எல்லா இதழ்களும் தன்னிடமிருக்கின்றன என்று சொன்னார். `அதிலே தமிழர் திருமணம் பத்தி ஒரு டிஸ்கஷன் ஓடிச்சு தம்பி.நீங்க அவசியம் படிக்கணும்...கதையெல்லாம் எளுதிறீக'

மேலும் அரைமணிநேரத்தில் அவர் என்னை அவரது வீட்டுக்கு அழைத்தார். `நாப்பத்தஞ்சு வருச தமிழ் வரலாறே கைவசம் இருக்கு...வந்து பாருங்க...எளவு எல்லாமே செல்லரிச்சு போயிருக்கு. எவன் படிக்கிறான்...ஒருத்தனுக்கும், இண்ட்ரெஸ்ட் இல்ல. எவனாவது அய்யமாரு வந்து வாசிச்சாத்தான் உண்டு...' அவர் திராவிட இயக்கத்தின் பேசுபொருட்கள் எல்லாம் மறைந்துவிட்டன என்ற துயரம் கொண்டிருந்தார். `எனக்கு திராவிட இயக்கம் பத்தி ஒண்ணும் நல்ல அபிப்பிராயம் கெடையாது' என்றேன். `நம்ம கவிதை வாசிப்பீங்களோ' `வாசிச்சிருக்கேன்...வெறும் வார்த்தைகளா இருக்கு...ரொம்ப பழைய கவிதை...'

`இருக்கலாம்...அதுக்கென்ன?' என்றார். எனக்கு அந்த சகஜமான இயல்பு ஆச்சரியமளித்தது. அதை நான் எதிர்பார்க்கவில்லை. `நீங்க புதுக்கவிதை எளுதுறீங்க போல' என்றார். `இல்ல நான் கவிதையெல்லாம் எழுதறதில்லை' `இப்பதான் பலபேரு கௌம்பி என்னமோ கிறுக்கிறானுங்களே க.நா.சுப்ரமணியம்னு ஒரு அய்யிரு..கையெல்லாம்கூட வீங்கியிருக்கும்...பாத்திருக்கேன்..அவருகூட நெறய கவிதைமாதிரி எளுதுவாரு... சரி எல்லாம் வரட்டும்..' அவர் அப்போதுதான் எனக்கு பிடித்தமானவராக ஆனார். அவருக்கு இந்த ஆட்டத்திற்கு அப்பால் செல்லும் விரிவு உள்ளூர இருந்தது.

`பளைய கவிதைன்னு சொன்னீங்க தம்பி...பளசுன்னு தெரிஞ்சுதான் எளுதினது...அதுக்குண்டான தேவைய நீங்க புரிஞ்சுகிடணும்....எதுக்கு பளையமாதிரி எளுதினோம்? ஏன்னாக்க நமக்குன்னு ஒரு மரபு இருக்கு. ஒலகத்திலே ஒண்ணோ ரெண்டோ மொழிக்காரனுக்குத்தான் அந்த மரபு இருக்கு...அந்தமரப நாம விட்டுட்டோம்னா அப்றம் நாம யாரு? சரி கேக்குறேன், இந்த மரப விட்டா பின்ன நமக்கு எளுத என்ன இருக்கு? வெள்ளைக்காரன் விமானத்த கண்டுபிடிச்சான். அத கொண்டுபோயி குண்டு போட்டு ஊரையெல்லாம் இடிச்சான்...அவனுக்கு எளுதறதுக்கு என்னென்னமோ இருக்கு. நாம என்ன மயித்த எளுதிர முடியும்? புளிச்சதண்ணிய குடிச்சுட்டு தெருவில வெளிக்குபோற சனங்க நாம...நாம அப்டி என்னத்த எளுதிருவோம்? உங்க சுந்தர ராமசாமி என்ன மயித்த எளுதிட்டார்? நான் கேட்டேன்னு போயி கேளுங்க'

கரகர தொண்டையில் கோபமே இல்லாமல் சாதாரணமாக பேசிக்கொண்டே சென்றார். `நம்மகிட்ட இருக்கிறது மரபு மட்டும்தான். அவ்ளவு பெரிய மரபு. மொதல்ல அங்க இருந்து ஒரு தொடர்ச்சிய உண்டு பண்ணுவோம்னு நினைச்சோம். பாரதிய எடுத்துக்கிட்டீங்கன்னா அந்த அய்யிருக்கு இந்த மரபு என்னான்னு தெரியும். ஆனா அவருக்கு வேதம் முக்கியம். வேதமுடைய தமிழ்நாடுங்கிறான். அது அவன் சாதிப்புத்தி. அவன் எல்லாத்தையும் விட்டுட்டு சொம்மா கீர்த்தனையா பாடி

வச்சுட்டான். நாம அப்டி விட்டிர முடியாதுல்ல? நமக்கு மரபு இருக்குல்ல? அதனால அங்க ஆரம்பிச்சோம்...அத உடைச்சுகிட்டு புதிசா ஒண்ணு வந்தா வரட்டும்னு நினைச்சோம்...எங்களுக்கும் புதுக்கவிதைன்னு நாலு வார்த்தய பொட்லமா மடிக்க தெரியாதா என்ன? ஆனா செய்யல்ல. மரப படிச்சு, மொழிய படிச்,சு புதிசா அதை உருவாக்கணும்னு நினைச்சோம்...

'நாங்க தோத்துட்டோம்னு சொல்றீங்க... அது எங்களுக்கே தெரியாதா என்ன? இந்தா வாறானுக , கவியரங்க கவிதைன்னு என்னமோ எளவையெல்லாம் கொண்டாந்து வாசிக்கிறானுக... ஒருபய ஒண்ணும் வாசிக்கிறதில்லை. எல்லாம் வேலையத்த பொளைப்பா போச்சு இப்ப...அதுக்காக நாங்க செய்தது இல்லேண்ணு ஆயிடுமா என்ன? எல்லாம் இங்கதான் இருக்கும்... அந்தக்காலத்திலே சுத்திவச்ச மண்சட்டிய எல்லாம் தோண்டி எடுக்கானுக. அதை மாதிரி இதையும் எடுக்கட்டுமே. இப்ப என்ன குறைஞ்சுபோச்சு? மண்ணு இருக்கே அது எல்லாத்தையும் வச்சுகிடும்... தமிழ் மண்ணுல என்னெனமோ இருக்கு தம்பி...இதுவும் இருந்துட்டு போவுது'

எனக்கு பேசுவதற்கு அழைப்பு. நான் பேசி முடிந்து வந்தபோதும் கவிஞர் அதே இடத்தில் அப்படியே இருந்தார். `வாங்கதம்பி பேசியாச்சா? என்னத்தை பேசினிங்க? சனங்களுக்கு ஒண்ணும் புரியறதில்ல. தமிழ் வாழ்க்கை அது பாட்டுல எங்கியோ இருக்கு. நீங்கள்லாம் எங்கியோ என்னமோ பேசிட்டிருக்கீங்க...ஒக்காருங்க...நீங்க அய்யிரோட ஆளா இருந்தாலும் பழசெல்லாம் படிக்கிறீங்க. ரொம்பநாள் கழிச்சு செந்தமிழ்ச்செல்விபத்தி எங்கிட்ட கேக்கிற முத சின்னப்பையன் நீங்கன்னு வைங்க....நேரம் கிடைக்கிறப்ப வீட்டுக்கு வாங்க...ஆற அமர எல்லாத்தையும் காட்டுறேன். பிடிச்சிருந்தா நம்ம வீட்டிலே வேணுங்கிறமாதிரி தங்கிக்கூட எல்லாத்தையும் படிங்க...


`என்னென்னமோ இருக்கு தம்பி...ஏகப்பட்டது பேசியிருக்காங்க. பேசிப்பேசி உண்டுபண்ணி எடுத்திருக்காங்க...ஒண்ணுமே இல்லியே. தமிழனுக்கு திருவோடு மட்டும்ல இருந்தது... எல்லாம் பேசி பேசி கண்டுபிடிச்சு வச்சதுதானே? இப்பகூட நமக்கு நம்மளப்பத்தி ஒண்ணும் தெரியாது....பெரிசா புறநாநூறு புடலங்கான்னு பேசிட்டிருக்கோம்....ஒருத்தனுக்கு ஒரு மயிரும் தெரியாது.... இப்ப கேக்கிறேன். சங்கப்பாட்டிலே ஆதன்னு ஒரு சொல்லு வருதே அதுக்கு என்ன அர்த்தம்?'

`அவங்க ஒரு அரசகுலம் இல்ல?' என்றேன். சிரித்து `சரிதான் கவனிச்சிருக்கீங்க...ஆனா ஆராய்ச்சி பண்ணல...ஆனா கவனிச்சதே பெரிய விசயம்...சங்கப்பாட்ட கூர்ந்து படிக்கிறீங்க பாருங்க அதுவே பெரிய விஷயம்... ஆதன்னா ஒரு தனி இனமா இருந்திருக்கலாம்னு தோணுது. ஆதன்கிற அடைமொழியோட நெறைய பேரு இருந்திருக்காங்க. நல்லாதனார் மாதிரி கவிஞனுங்க...பல அரசர்கள்...அவனுங்க யாரு...ஆதன்னாக்க ஒரு பேரு மட்டும்னு சொல்லிட முடியாது...ஆதர்கள் வெளிய இருந்து வந்தவனுகளா இல்ல இங்க இருந்த பழங்குடிகளா? ஆதன்னா தந்தைன்னு அர்த்தமுண்டு. அப்ப அவனுக ரொம்ப முக்கியமான ஒரு சின்ன குடி... பின்னாடி பெருங்குடி மன்னனுங்க அவனுங்கள அழிச்சிருக்கணும்....எல்லாம் போட்டு நோண்டி பாத்தா தெரியும்...இப்ப எவனுக்கு அக்கற? கொஞ்சம் குறிப்பு வச்சிருக்கேன்...வாங்க எல்லாத்தையும் காட்டுறேன்'

`அய்யா கவியரங்கு ஆரம்பமாகிவிட்டது...' என ஒருவர். `தமிழிலே பேசணுமானா தமிழிலே பேசு..அதென்ன ஆரம்பம்...' என முனகியபடி எழுந்து ஜிப்பாவை தலைவழியாக கழட்டினார். பளபளவென இன்னொரு ஜிப்பாவை எடுத்து மாட்டிக்கொண்டார். ஒரு சின்னப்பொட்டலத்தை திறந்து பவுடர் எடுத்து போட்டுக்கொண்டார். அது அங்கே இருந்த போரிக் பவுடரோ என்னவோ என நான் பதைப்படைந்தேன். தலையை சீவியபின்

‘கிளம்பலாமா தம்பி? கவியரங்க கவிஞர்கள் அனைவரும் வந்துவிட்டார்களா?’ என செந்தமிழ் பேசி கிளம்பிச்சென்றார்.

அதன்பின் நான் அவரைப்பார்க்கவில்லை. சென்னையில் அவரது சிலையை தாண்டிச்செல்லும்போது ஒருமுறை நண்பரிடம் சொன்னேன் பளபளா ஜிப்பா மாட்டி பௌடர் போட்ட சுரதாவுக்குத்தான் அந்த சிலை வைக்கப்பட்டிருக்கிறது என.



சுரதாவின் **தேன்மழை** என்பது உவமைக் கவிஞர் சுரதா எழுதிய மிகச்சிறந்த மரபுக்கவிதைத் தொகுப்பு. 1965-ல் வெளியான இந்நூல், இயற்கை, காதல், சமூகம் மற்றும் கவிதை நயங்களை உவமைகள் வழியே கையாண்டுள்ளது. 1969-ல் தமிழக அரசின் விருதைப் பெற்ற இப்புத்தகம், தமிழ்க் கவிதையுலகில் உவமைகளின் களஞ்சியமாகக் கருதப்படுகிறது.

தேன்மழை நூல் பற்றிய முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** உவமைக் கவிஞர் சுரதா.
- **வகை:** மரபுக்கவிதைகள்.
- **முதற்பதிப்பு:** ஜனவரி 1965 (சேகர் பதிப்பகம்).
- **விருது:** 1969-ல் தமிழக அரசின் பரிசு பெற்றது.
- **சிறப்பு:** இது 100-க்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்டுள்ளது.

நூலின் உள்ளடக்கம்:

தேன்மழை இயற்கையின் எழில், காதல் (அகத்துறை), சமூக நிகழ்வுகள், மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் போன்றோரைப் பற்றிய கவிதைகளை உள்ளடக்கியது. கவிஞர் சுரதா தனது கவிதைகளில் ஆழமான, அதேசமயம் எளிமையான உவமைகளை கையாண்டுள்ளார், தினமலர் செய்தி.

முக்கியப் பகுதிகள்:

- இயற்கை எழில்
- அகத்துறை (காதல்)
- காரணப்பெயர்கள்
- மங்கையர் பூங்கா
- இசைவிருந்து.

தமிழின் மரபுக் கவிதை வளத்தை மேம்படுத்திய மிக முக்கிய நூல்களில் ஒன்றாக தேன்மழை திகழ்கிறது.



https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZt9juIy.TVA_BOK_0002001

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.tamilvu.org/library/nationalized/pdf/36-kavingarsuratha/thainmazhai.pdf

சுரதாவின்

தேன்மழை

கவிஞர் சுரதா

அருள்—சுடர் பதிப்பகம்

3, கடம்பாடி அம்மன் கோயில் தெரு,
வளசரவாக்கம், சென்னை – 600 087.

@@@@@@@@@@

நான் எப்போதும் எழுதுவதில்லை; எப்போதாவது எழுதக் கூடியவன்.

அதிகமாக எழுதவேண்டும் என்பதைவிட பயனுள்ளதாக சில எழுதினாலே சிறந்தது என்று கருதுபவன்.

எனது இருபதுக்கும் மேற்பட்ட நூல்களிலே, தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசினையும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 'இராசராசன் விருதினையும்' பெற்றுத்தந்த 'தேன்மழை' என்னும் இந்நூல் எனக்கு பெரும்புகழ் சேர்த்த புத்தகம்.

ஐந்து பதிப்புகளைக்கண்ட இந்நூல் ஆறாவது பதிப்பாக இப்போது வெளியாகிறது.

திருவாசகத்திற்கு சிறந்ததொரு உரையெழுதியும், பாவேந்தர் படைப்புக்களை முழுமையாகத் தொகுத்து வெளியிட்டும் பெரும் புகழ் பெற்ற கவிஞர் ஆ. திருவரசகன் அவர்கள், தனது அருள் சுடர் பதிப்பகத்தின் மூலமாக இதை வெளியிடுவது எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது.

மிகச் சிறப்பான முறையில் புத்தகத்தை வெளியிட்டிருக்கும் அவரை பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.
25-12-2000.

அன்புடன்
சுரதா

பதிப்புரை

இதுவரை தோன்றிய தமிழ்க் கவிஞர்களுள் எண்ணற்ற சிறப்பைப் பெற்றவர் உவமைப் பாவலர் சுரதா அவர்கள். உலகக் கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க ஒப்பற்ற பாவலர். இன்றைய எழுச்சிக்

கவிஞர்கள் பலரும் சுரதா என்னும் சூரியனிலிருந்து ஒளிபெற்ற நிலவுகள்தாம் என்றால் மிகையில்லை.

புதுக்கவிதைச் செறிவுகளை மரபுப்பாடல்களிலே தந்த மாபெரும் புலவர். காட்சிக்கு எளியரெனினும் அவரது கவிதைச் சிகரத்தை யாரும் எட்டிப் பிடித்துவிட முடியாது.

பாவேந்தருடைய தலைமாணாக்கராய்த் திகழும் கவிஞர் பெருமான் முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் தமிழ்க் கவிதைப் பாலம் அமைத்த கவிதைப் பொறியாளர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இராசராசன் விருது, தமிழக அரசின் சிறந்த நூலுக்கான விருது (தேன்மழை) போன்ற பல்வேறு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டதாலே சிறப்புப் பெற்றன.

தமிழ்ச் சர்க்கரைப் பந்தலில் பெய்த தேன்மாரியை (தேன்மழையை) எமது அருள்-சுடர் பதிப்பகம் ஆறாவது பதிப்பாக வெளியிடுவதிலே மிகவும் இன்பம் கொள்கிறது.

பல தமிழ்க் கவிஞர்கள் சொற்சுவைக்கவிஞர் சுரதா அவர்களின் பாட்டுத் துறைமுகத்திலேதான் ('துறைமுகம்' - என்பதும் அவரது கவிதைத் தொகுப்புத்தான்) கரையேறுகிறார்கள்.

வள்ளலார், பாரதியார், பாவேந்தர் வரிசையிலே தமிழை எளிமைப்படுத்தி வலிமையூட்டிய உவமைச் சுரங்கம் நமது சுரதா அவர்கள்.

திரைப்பட வசன வானத்திலும் இந்தக் கதிரவன் தனது பொற்கிரணங்களை இளமையில் தவழவிட்டு அத்துறையையும் ஒளிமயமாக்கியது.

அருமைக் கவிஞர் சுரதா ஆயிரம் பிறை கண்ட ஆண்டு இந்த ஆண்டு! இவ்வேளையில் அவரது 'தேன்மழையை' வெளியிட்டு அவரது திருவடிகளில் காணிக்கையாக்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தாழ்பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வரிய நூலை வெளியிட பல்லாற்றானும் உதவிய உவமைப்பாவலர் சுரதா அவர்களின் மைந்தனார் கவிஞர் திரு. சுரதா கல்லாடன் அவர்களுக்கும் உயரிய வகையில் அச்சியற்றித்தந்த சேகர் அச்சகத்தாருக்கும் என்றென்றும் நன்றி.

அன்புடன்

ஆ. திருவாசகன்
அருள்-சுடர் பதிப்பகம்

@@@@@@@@@@@@@@@@

பொருளடக்கம்

3. சொல் விளக்கம்

4. காரணப் பெயர்கள்

5. மங்கையர் பூங்கா

6. குறுங்காவியம்

7. அகத்துறை

8. நெய்த செய்திகள்

9. காவியக் கடிதங்கள்

10. விழாத விழாக்கள்

11. எப்போதும் இருப்பவர்கள்

12. துன்பத் துறைமுகம்

காணொளிகள்

01] உவமை புலவர் - சுரதா வாழ்க்கை வரலாறு
https://www.youtube.com/watch?v=swjHfQcbujk [9:47]

02] உவமை கவிஞர் சுரதா பிறந்த நாள் - அரசியல் தலைவர்கள் மரியாதை | நேரலை காட்சிகள்
https://www.youtube.com/watch?v=98xDYTza8RQ [12:05]

03] தமிழ் | தினம் ஒரு தமிழ் அறிஞர் || சுரதா
https://www.youtube.com/watch?v=9WJmLosu56Y [10:03]

04] சுரதா/ உவமை கவிஞர் பற்றிய தகவல்கள்
https://www.youtube.com/watch?v=yXJ3pWOi2oM [11:37]

(😊)(😊) சுரதா (😊)(😊)